விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 28 சனிக்கிழமை (11.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 113

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த

# இப்போது தவறினால் எப்போதும் முடியாது

## பூட்டான் பிரதமருடன் ஜனாதிபதி சந்திப்பு



23ஆம் பக்கம் பார்க்க....

## தென்னாபிரிக்க பிரதிநிதி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தற்போது நல்லிணக்கம் ஏற்படுத்தப்படாவிட்டால் இன்னும் 40 வருடங்கள் சென்றாலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய போராளிகளில் ஒருவரான ஐவர் எச்.ஜென்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படாவிடின் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடத் தயார்!

### மாதுலுவாவே சோபித தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் 100 நாட்கள் நிறைவடைவதற்கு சொற்ப நாட்களே உள்ளதாகவும் அதற்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் குறைக்கப்படவில்லை என்றால் அரசாங்கத்திற்கு எதிராக பாதைக்கு இறங்க ஆயத்தமாக உள்ளதாக கோட்டை மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் குறைப்பதாக ஒப்புக்கொண்டு 49 பேர் கையெழுத்திட்டுள்ளனர். அதன் பின்னரே தேர்தல் இடம்பெறும்.

100 நாட்களில் 90 நாட்கள் கடந்து விட்டன. நிறைவேற்று அதிகாரம் முழுமையாக குறைக்காவிட்டால். அதன் ஒரு பகுதி அல்லது அரை பகுதியாவது குறைக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகாரத்தை குறைத்து பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்திற்கு வருவார் என சிலர் கூறுகிறார்கள்.

அப்படி என்றால் அதிகாரம் அவருக்கா வழங்கப்படும். ஜே.ஆர் அவருக்கு ஏற்ற வகையிலே அரசியலமைப்பை அமைத்துக்கொண்டார். அதனை இம்முறையும் நடைமுறைப்படுத்த வேண்டுமா? இம்முறை மாற்றம் வேண்டும்.

ஜனாதிபதி பொம்மை போன்று செயற்படுவார் என்று சிலர் கூறுகிறார்கள்.

23ஆம் பக்கம் பார்க்க....

## கூட்டமைப்பு-ரணில் சந்திப்பு

### கோரிக்கைகளை நிறைவேற்றித் தர பிரதமர் உறுதி

(கொழும்பு)


பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினமிரவு இடம் பெற்றுள்ளது.

கொழும்பில் உள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மாலை 6 மணி

23ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியால் முடியாவிட்டால் ரணில் பொறுப்பேற்க வேண்டும்

### கூறுகிறது பொது பல சேனா



(கொழும்பு)

நாட்டில் பல தலைவர்கள் இருக்கின்றார்கள். மைத்திரியால் முடியாவிட்டால் நாட்டின் அதிகாரத்தை ரணில் பொறுப்பேற்க வேண்டுமென பொது பல சேனா இயக்கத்தின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நாடு பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகவும், எதிரி படைகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்த யாரும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள பிரச்சினைகளை மாத்திரமே 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் அமைந்த நாட்களில் பேசப்பட்டிருந்தது. எனினும் அபிவிருத்திகள் எதுவும் இல்லை.

குருநாகல் மாவட்டத்தில் முன்னாள் ஜனாதி

24ஆம் பக்கம் பார்க்க....

## எதிர்க் கட்சித் தலைவர் பதவி எமக்கு வழங்கப்பட வேண்டும்

### சபாநாயகரிடம் த.தே.கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் எதிர்க் கட்சி தலைவர் பதவியை தமக்கு வழங்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியுள்ளது.

இது தொடர்பில் கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தன் நேற்று சபாநாயகரிடம் கோரிக்கை கடிதம் ஒன்றை கையளித்துள்ளார். தேசிய அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் இணைந்த பின்னர் ஏற்கெனவே எதிர்க் கட்சி தலைவராக பதவிவகிக்கும் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு அதனை வகிக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனவை எதிர்க் கட்சி தலைவராக்குவதற்கான கையொப்பங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் திரட்டி வருகின்

23ஆம் பக்கம் பார்க்க....

## அரசியலமைப்பு சூழ்ச்சி தோல்வி - சம்பிக்க



(கொழும்பு)

பிரதமரை நாட்டின் பிரதான நிறைவேற்றாளராக மாற்ற முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பு சூழ்ச்சி தற்போது தோல்வியடைந்துள்ளதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணிகளை இன்று அடையாளப்படுத்துங்கள்

## வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த காணிகளில் 590 ஏக்கர் காணிகள் அடுத்த கட்டமாக விடுவிக்கப்படவுள்ள நிலையில் காணிகளின் உரிமையாளர்கள் இன்றைய தினம் சென்று தமது காணிகளை அடையாளப்படுத்துமாறு வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு கோரியுள்ளது.

இது தொடர்பில் வலி.வடக்கு மீள்குடியேற்றக்குழுவின் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபையின் தலைவருமான எஸ்.சஜீவன் தெரிவிக்கையில்,

1000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படுவதாக புதிய அரசாங்கம் அறிவித்த அறிவிப்புக்கமைய முதற்கட்டமாக வளலாய் பகுதியில் 233 ஏக்கரும், வசாவிளான் பகுதியில் 197 ஏக்கரும் ஆக மொத்தம் 430 ஏக்கர் காணிகள் கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கையளிக்கப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட காங்கேசன்துறை தெற்கு (ஜே/235 கிராம அலுவலர்), பளை வீமன்காமம் வடக்கு (ஜே/236 கிராம அலுவலர்), பளை வீமன் காமம் தெற்கு (ஜே/237 கிராம அலுவலர்), கட்டுவன் (ஜே/238 கிராம அலுவலர்), தென் மயிலை (ஜே/240 கிராம அலுவலர்), வறுத் தலைவிளான் (ஜே/241 கிராம அலுவலர்), தையிட்டி தெற்கு (ஜே/250 கிராம அலுவலர்), பலாலி தெற்கு (ஜே/252 கிராம அலுவலர்) ஆகியவற்றின் காணிகளும்,

கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வளலாய் (ஜே/284 கிராம அலுவலர்) காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன.

இக்கிராம பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் அனைவரும் தமது காணிகளினை இன்றைய தினமே நேரில் வந்து உறுதிப்படுத்தி கொள்வதன் மூலம் தேவையற்ற சிரமங்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ள காணிகள் சிலவற்றில் ஏற்கெனவே மக்கள் குடியமராத காணிகள் எனக் கூறி விடுவிக்கப்படுகின்ற காணிகளும் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிகளிலும் முழுமையாக விடுவிக்கப்படாமல் துண்டு துண்டாகவே விடுவிக்கப்படுகின்றன. எனவே இது மக்களோடு இராணுவம் சேர்ந்து இருப்பதற்கு திட்டமிடப்படுவதாக அச்சத்தை ஏற்படுத்து கின்றது எனவும் தெரிவித்துள்ளார். (செ-4)

## 87 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

படகொன்றில் கஞ்சா கொண்டு வந்ததாகக் கூறப்படும் இருவர், யாழ்ப்பாணம், நெடுந்தீவுக் கடலில் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தங்களிடம் ஒப்புடைக்கப்பட்டதாக நெடுந்தீவு பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இவர்களிடமிருந்து 87 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் தெரியவருவது, இந்தியாவின் கேரளாவிலிருந்து கடத்தி வரப்பட்ட கஞ்சாவை இலங்கைக்கு கொண்டு வந்தபோது, சந்தேகத்துக்கிடமான முறையில் படகொன்று வருவதை அவதானித்த கடற்படையினர், அதனை 6 கடல் மைல் தூரத்தில் மறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, படகின் கீழ்த்தளத்தில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரிய வந்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்களை ஊர்காவற்றுறை நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## யாழ்ப்பாணத்தில் கோடைத்திருவிழா

(யாழ்ப்பாணம்)

ஐங்கரன் மீடியா சொலுசன் ஸ்தாபனத்தாரின் ஏற்பாட்டில் மானிப்பாய் செல்லமுத்து மைதானத்தில் நாளை மறுதினம் 13ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.கோடைத்திருவிழா நிகழ்வு இடம்பெறும்.

காலை 8.00 மணி முதல் இடம்பெறும் இந்நிகழ்வில் தென்னிந்திய இசைக் கலைஞர்களின் இசைக் கச்சேரியும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக இருந்த இந்நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (ந)

## கிளிநொச்சி-முறிப்பு குளத்தில் ஆணின் சடலம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி -முறிப்புக்குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

குறித்த சடலம் கிளிநொச்சி திருவையாறு பகுதியை சேர்ந்த பூலோகநாதன் தயாபரன் (வயது 21) எனும் இளைஞனுடையது என அடையாளம் காணப்பட்டுள்ள அதேவேளை, கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சடலத்தினை நீதவான் பார்வையிட்டதன் பின்னர் அது மீட்கப்பட்டு மருத்துவ பரி



சோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-11)

## வவுனியா வடக்குக்கு புதிய கல்விப் பணிப்பாளர்

(வவுனியா)

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக எஸ்.ஸ்ரீஸ்கந்தராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்திய சீலனால் வழங்கப்பட்டுள்ளது. (ந)

## யூன் முதல் சிகரெட் பைக்கற்றுகளில் 80 சதவீதமான எச்சரிக்கை படங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் யூன் மாதம் தொடக்கம் சிகரெட் பைக்கற்றுகளில் 80 வீதமான எச்சரிக்கை படங்கள் பிரசுரிக்கப்படும் என அதுரலியே ரதன தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடக அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் புகைத் தலை குறைக்கும் நோக்கில் 60 வீத எச்சரிக்கை படங்கள் தற்போது பிரசுரிக்கப்படுகின்றன. எதிர்வரும் யூன் முதல் 80 வீதம் எச்சரிக்கை படங்களை பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடைகளில் எச்சரிக்கை பதாதைகள் வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)


### விசேட கருத்தரங்கு

அதிபர் சேவை தரம் 3 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கானது.
ஆரம்பம் : 12.04.2015 (ஞாயிற்றுக்கிழமை) பி.ப 1.00 மணிக்கு
ஒவ்வொரு ஞாயிறும் 1 மணியிலிருந்து 5 மணி வரை நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ் ஆஸ்பத்தரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
தொ.பே:- 0766883394 (சி-636)

### வீடு வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலுக்கு அண்மையில சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு :- 0718513913 (இ)

### புலோலி கலாசார நடுவம் (திருமண மண்டபம்) திறப்பு விழா

பருத்தித்துறை வீதியில் இருந்து ஆனை விழுந்தான் நோக்கிச் செல்லும் மருதங்கேணி வீதியில் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய (முதலி அம்மன்) முன்பாக அமைந்துள்ள மண்டபம்,
11.04.2015 சனிக்கிழமை மாலை 2.30 மணியளவில்
கௌரவ M.A.சுமந்திரன் பா.உ அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அன்புடன் : Dr.M.ரவீந்திரன், வே.ஜெ.போஸ் மா.ரஜீந்திரா (047)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி றோட்டில் உள்ள VCARE MOTORS கடைக்கு பெண் வேலையாளர் தேவை.
தொ.பே:0776141928 (060)

### விற்பனைக்கு

Super cub, made in china வகையைச் சேர்ந்த NP-WL XXX எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
விலை 43, 000/=
தொடர்புகளுக்கு:0778757137 (059)

### கண்ணீர் அஞ்சலி

அமரர் மீனாட்சி செல்லத்துரை



எமது வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர் திரு.செ.குபேரநாதன் அவர்களின் அன்புத் தாயார் அமரர் மீனாட்சி செல்லத்துரை அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், SDS, SDC
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் (061)



மிக குறுகிய காலத்தில் யாழ் மக்களின் நன் மதிப்பைப் பெற்ற ஷைலோ ஐஸ் கிறீம் நிறுவனத்தினர் ஆகிய நாம் சுத்தமான, சுவையான, ஆரோக்கியமான, இயற்கையான ஊட்டங்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும் SYLO ICE CREAM விற்பனை நிலையத்தை யாழ் நகர் பஸ் நிலையம் முன்புறம் ஆஸ்பத்திரி வீதியில் திறந்துள்ளோம் என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.

ஷைலோ ஐஸ் கிறீம்
Sylo Natural Ice Cream
இல. 442, ஆஸ்பத்திரி வீதி, (சைக்கிள் பார்க் எதிரில்), யாழ்ப்பாணம்.
T.P :- 021 221 7885
(9988)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22-வது ஆண்டு அஞ்சலிக்கூட்டம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஸ்தாபகர் அமரர் காந்தி வேலாயுதபிள்ளையின் 22 ஆவது ஆண்டு நிறைவு அஞ்சலிக் கூட்டம் அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் நடைபெறவுள்ளது.

இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சங்கத்தின் யாழ். மாவட்ட பணிமனையில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் தலைமை தாங்குவார். தொடக்க உரையை சங்கத்தின் பொதுச் செயலாளரும் காந்தீயம் பத்திரிகை ஆசிரியருமான எம். சாந்தன் சத்தியகீர்த்தி ஆற்றுவார்.

அஞ்சலி உரையை ஓய்வு பெற்ற அதிபர் மூதறிஞர் ஆ.சபாரத்தினம் நிகழ்த்துவார். கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ள கூட்டம் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் கா. கார்த்திகேசு தலைமையில் இடம்பெறவுள்ளது. தொடக்க உரையை காந்தி நிலையக் குழுச் செயலாளர் ப.சதானந்தன் ஆற்றுவார். அஞ்சலி உரையை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை நிகழ்த்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## விளையாட்டு விழா

British Business College பாலர் பாட சாலைகளுக்கிடையிலான 13 ஆவது இல்ல விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் British Bu siness College இன் தலைவர் பி.அருண் குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டு விழாவிற்கு பிரதம விரு ந்தினராக யாழ். மாநகர சபை பொதுசன தொடர்பு உத்தியோகஸ்தரும் நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவருமாகிய திருமதி எஸ். யோகசிவம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

# 590 ஏக்கர் காணிகள் விடுவிப்பு!

## யாழ். அரச அதிபர் தகவல்



(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட காணிகள் விடுவிப்பின் இரண்டாம் கட்டத்தில் 590 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் என். வேதநாயகன் அறிவித்துள்ளார்.**

இதன்படி தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/ 235 காங்கேசன்துறை தெற்கு, ஜே/236 பளை வீமன்காமம் வடக்கு, ஜே/ 237 பளை வீமன்காமம் தெற்கு, ஜே/ 238 கட்டுவன், ஜே/ 240 தென் மயிலை, ஜே/241 வறுத்தலை விளான், ஜே/250 தையிட்டி தெற்கு, ஜே/252 பலாலி தெற்கு மற்றும் கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/ 284 வளலாய் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் பகுதியாக 590 ஏக்கர் காணிகள் இரண்டாம் கட்டத்தில் விடுவிக்கப்படுகின்றன.

இதற்கமைய இப்பிரிவுகளை சேர்ந்த காணி உரிமையாளர்கள் இன்று காலை 9 மணிமுதல் இப்பகுதியிலுள்ள தங்களது காணிகளை பார்வையிடுவதுடன் தமது பதிவுகளையும் கிராம சேவையாளர்கள் மூலம் மேற்கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# மகிந்தவின் அரசை அழித்த சம்பிக்க மைத்திரி அரசையும் அழிக்க முயற்சி

## டிரான் அலஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மின்வலு எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை அழித்தது போல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தையும் அழித்து வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கு மாகாண வீடமைப்புத் திட்டத்தில் இடம்பெற்றுள்ளதாக கூறப்படும் நிதி மோசடி குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸிடம் நிதி மோசடி விசாரணைப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் சுமார் 2 மணிநேரம் விசாரணைகளை நடத்தினர்.

இந்த விசாரணைகளின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட டிரான் அலஸ், தனக்கு எதிரான குற்றச்சாட்டின் பின்னணியில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சம்பிக்க ரணவக்க உயரமாக வளர்ந்தாலும் அவருக்கு மூளை யில்லை. அவரது செயற்பாடுகளை நான் நன்கு அறிவேன்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை அழித்தது போல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தை சம்பிக்க அழிக்க போகிறார் எனவும் டிரான் அலஸ் சுட்டிக்காட்டினார்.

டிரான் அலஸ்க்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் அவருக்கு சார்பாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆஜராகியிருந்தார்.

சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்து கொடுக்கும் திட்டத்தின் மூலம் டிரான் அலஸ் 645 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத் திற்கான பணத்தை டிரான் அலஸும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் எனக் கூறப்படும் எமில் காந்தன் ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்ததாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்திருந்தது.

கிழக்கு மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வீடுகளை நிர்மாணித்து கொடுப்பதற்கான அனுமதியை ராடா என்ற நிறுவனத்திற்கு 2006 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகம் வழங்கியிருந்தது. அந்த நிறுவனத்தின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் செயற்பட்டு வந்தார்.

ராடா நிறுவனத்திற்கு 645 மில்லியன் ரூபா பணம் வழங்கப்பட்ட போதிலும் அந்த நிறுவனம் வீடுகள் எதனையும் நிர்மாணித்து கொடுக்கவில்லை. இந்த பணத்தில் 125 மில்லியன் ரூபா 9 காசோலைகள் மூலம் மோசடி செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த நிதி மோசடி சுமத்தப்பட்டுள்ள டிரான் அலஸ் உட்பட ராடா நிறுவனத்தின் பணிப்பாளர் சபையை சேர்ந்த 5 பேருக்கு வெளிநாடு செல்ல கோட்டை நீதவான் நீதிமன்றம் தடைவிதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் தன் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த குற்றச்சாட்டை மறுப்பதாக டிரான் அலஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தொழில்நுட்ப மாற்றீட்டு பயிற்சி நெறிகள்

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் வகையில் கீழே குறிப்பிட்டுள்ள பின்வரும் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள் கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்கு பெற விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னராக கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

Video Editing Techniques & Computer Graphic Design

Computer Networking Tec hniques

Computer Hardware

திரவ சவர்க்காரம், சவர்க்கார தூள் தயாரித்தல் (Liquid Shop & Detergent Powder)

பசுப்பாலினை அடிப்படையாக கொண்ட உற்பத்திப் பொருட்கள் தயாரித்தல்

இதற்கான பதிவுகளை 021 226 4958 என்ற தொலைபேசி எண் ஊடாகவும் மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இராசி பலன்

11.04.2015

(பங்குனி 28, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.07 மணிக்கு

சப்தமி மாலை 6.25 மணிவரை

பூராடம் பின்னிரவு 3.49 மணிவரை

இராகுகாலம் 9.06-10.36 மணிவரை

சுபநேரம் 3.06-4.36 மணிவரை

வளவன்

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பிறருக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**மிதுனம்:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்:** தொலைபேசி மூலம் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பிள்ளைகளின் நீண்ட நாளைய விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**கன்னி:** பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர என்ன வழியென்று யோசிப்பீர்கள், வாகன சுகமுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம்

**துலாம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகை அமையும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், உங்களின் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்

**தனுசு:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், அயராது பாடுபடுவீர்கள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை

**மகரம்:** சயன சுகக் குறைவான நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், மனதில் புதிய திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி



## பயத்தை எதிர்கொள்ளல்



**நா**ம் நமது வாழ்வில் நற்செயல்களை சேகரிக்காமல் தவறவிட்டு விடுவோமோ என்று மிகவும் அஞ்சுகிறோம். அதனால் உலகாயதமாகி நமது நற்செயல்களுக்கான வங்கிக் கணக்கை உருவாக்க ஆரம்பிக்கிறோம். மேலும் அத்துடன் நிற்பதில்லை. மறந்து விடாமல் இருப்பதற்காக நாம் செய்த எல்லா நற்செயல்களைப் பற்றியும் தொடர்ந்து கடவுளிடம் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்! கடவுளின் விடயத்தில்கூட நாம் மிகவும் உலகாயதமாக நடந்துகொள்கிறோம்!

புரிந்துகொள்ளுங்கள்.... நீங்கள் பூமியில் பெயரளவில் நல்ல செயல்களைச் செய்துவிட்டு நுழைவதற்கு கடவுள் ஒன்றும் சொர்க்கத்தில் விடுமுறை வாசஸ்தலம் நடத்திக் கொண்டிருக்கவில்லை. நீங்கள் வாழும் பொழுது அவற்றின் பின்னாலுள்ள உண்மையைப் பற்றிய எந்தவிதக் கருத்தோ இல்லது உணர்வோ இன்றி, எப்பொழுதும் இதுபோன்ற உலகாயதமான செயல்களைச் செய்ய முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள். இவற்றைக் கொண்டு நீங்கள் புண்ணியம் என்கிற பெரிய கோட்டையைக் கட்டுவீர்கள். பிறகு அந்தக் கோட்டை நீங்கள் இறக்கும் பொழுது உங்களுடன் வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்.

அது எப்படியிருக்கிறதென்றால்... நீங்கள் கனவில் ஒரு வீட்டைக் கட்டி வண்ணம் பூசி அலங்கரித்து மகிழ்ச்சியடைகிறீர்கள். உங்கள் கனவிலிருந்து கண்விழித்து எழும்பொழுது என்ன நிகழ்கிறது? வீடு எங்கே போயிற்று? நீங்கள் கண்விழித்த பிறகு அதனால் ஏதேனும் பயன் உண்டா? கிடையாது! அதே போல்தான் நீங்கள், இந்த புண்ணியம் என்கிற கருத்தை வைத்துக் கொண்டு உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்கள். நாம் எல்லாவற்றையும்- தெய்வீகத்தையும் சேர்த்து- ஒரு எளிமையான வியாபாரமாக குறைத்து விட்டோம். அவ்வளவுதான்.

நான் பலரையும் பார்த்திருக்கிறேன்... அவர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒரு குறிப்பிட்ட கோயிலில் உள்ள ஒரு குறிப்பிட்ட தெய்வத்தை ஒரு நிவேதனத்துடன் தரிசனம் செய்வதாக வேண்டிக்கொள்கிறார்கள். ஒரு சனிக்கிழமை போக முடியவில்லை என்றால் அந்தக் கடவுளுக்கான நிவேதனத்தை அவர்களுடைய ஓட்டுனரிடம் கொடுத்து அனுப்புகிறார்கள்! மிகவும் தெளிவாக இருங்கள்..... நீங்கள் இறக்கும் பொழுது இந்தப் பொருள் சார்ந்த உலகம் உங்களுடன் வராது. விழிப் புணர்வுடனும் தியானத்திலும் இருந்த கணங்கள் மட்டுமே உங்களுடன் வரும்.

இந்த ஒரு விடயத்தைப் புரிந்துகொள்ளுங்கள்... கடவுளுக்கு உங்களைப் பற்றி உங்களைவிட நன்றாகவே தெரியும். அவருக்குத் தெரியுமாதலால் உங்களால் அவரிடம் இருந்து எதையும் மறைக்க முடியாது.

அதனால் அவரிடம் அஞ்சவோ அல்லது அவரைத் திருப்திப் படுத்தவோ வேண்டிய காரணம் எதுவும் இல்லை.

கடவுளால் உங்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால் பிறகு இந்த உலகம் முழுவதும் எந்தப் புரிந்துகொள்ளுதலும் இருக்க முடியாது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி



# அதிசய உலகம்

### ரத்தச் சிகப்பு வண்ணத்திற்கு மாறிய நிலா... ஆச்சரியத்துடன் கண்டு வியந்த மக்கள்!...

இயற்கையின் பேரதிசயங்களில் ஒன்றான சந்திர கிரகணம் சில தினங்களுக்கு முன்பு நிகழ்ந்தது. சூரியன் - பூமி - சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது பூமியின் நிழல் சந்திரன் மீது விழுந்து அது முழுமையாக மறைக்கப்படும் அற்புத நிகழ்வே சந்திர கிரகணம் ஆகும்.

இவ்வாறு நிகழ்ந்தது மிகவும் குறுகிய நேர சந்திர கிரகணம் ஆகும். 100 ஆண்டுகளுக்கு முன்புதான் இதேபோன்ற குறுகிய நேர சந்திரகிரகணம் நிகழ்ந்தது.



இந்தியா மட்டுமின்றி வட அமெரிக்கா, ஹாவாய், ஜப்பான், நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா மற்றும் ஆசியாவின் கிழக்கு பிராந்தியங்களில் வாழும் மக்கள் சந்திர கிரகணத்தை தரிசித்தனர்.

குறிப்பாக லாஸ் ஏஞ்ஜல்சில் நள்ளிரவு 12.58 முதல் 1.03 மணி வரை சந்திர கிரகணம் நிகழ்ந்ததால் நிலா ரத்தச் சிகப்பான நிறத்தில் மாறும் அற்புதக் காட்சியை அமெரிக்க மக்கள் தெளிவாகக் கண்டு களித்தனர்.

ஆனால் இந்தியாவின் பல பகுதிகளில் பகுதியான சந்திர கிரகணமே தெரிந்தது. இருப்பினும், சென்னை பிர்லா கோளரங்கத்தில் தொலை நோக்கியின் உதவியுடன் அன்று மாலை 6.30 மணியிலிருந்தே சந்திர கிரகணத்தைக் காண ஆவலுடன் காத்திருந்த சிறுவர்கள் பலர், சில நொடிகள் என்றாலும் ரத்தச் சிகப்பு நிறத்தில் நிலா மாறும் அற்புதக் காட்சியை கண்டு வியந்துள்ளனர்.



# சமைப்போம் சுவைப்போம்

## குழிப்பணியாரம்



**தே.பொருட்கள்:**

பச்சரிசி - 1 கப்

அவல் - 1/2 கப்

வெல்லம் - 11/2கப்

ஏலக்காய் -1/4 டீஸ்பூன்

நல்லெண்ணெய் - சிறிது

**செய்முறை:**

அரிசியையும், அவலையும் தனித்தனியாக நன்றாகக் கழுவி தனியாக ஊற வைக்கவும். இரண்டையும் ஒன்றன் பின் ஒன்றாக தண்ணீர் விட்டு நைசாக அரைத்து பிறகு வெல்லத்தையும் போட்டு அரைக்கவும்.

ஏலக்காய் பொடி சேர்த்து கலந்து வைக்கவும். இட்லி மா பதத்திற்கு இருக்க வேண்டும்.

பணியார சட்டியில் நல்லெண்ணெய் விட்டு சூடாக்கி ஒவ்வொரு குழியிலும் முக்கால் பாகம் அளவிற்கு மாவை ஊற்றவும்.

மா அடிப்பகுதியில் வெந்ததும், குச்சி அல்லது ஸ்பூன் உதவியால் திருப்பி விட்டு நன்றாக வெந்ததும் எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மத வருஷப் பிறப்புக் கருமங்கள்

| | | | |
|---|---|---|---|
| கேது | சூரி புதன் செவ் | சுக் | |
| | மன்மத வருஷப் பிறப்பு ஜாதகம் | | லக்கினம் குரு |
| சந் | | | |
| | சனி | | ராகு |

**வாக்கிய பஞ்சாங்கம்**

சரியான மன்மத வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (14.04.2015) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.23 மணிக்கு. அபர பக்க தசமித்திதியில் அவிட்ட நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சுபம் நாம யோகத்தில் லிட்டிக் கரணத்தில் கடக லக்கினத்தில் கடக நவாம்சத்தில் குருகால வோரையில் சுக்கிரன் சூக்கும காலவோரையில் தா மத குணவேளையில் நட்சத்திரப் பட்சியாகிய ம யில் நடைத்தொழிலும் சூக்கும பட்சி நடைத்தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய மன்மத வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் 8.23 மணிமுதல் அன்று பிற்பகல் 4.23 மணிவரை விஷு புண்ணிய காலமாகும்.

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள், சித்திரை, உத்தராடம் 2,3,4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் இவற்றிற் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து சங்கிரமதோசத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

**திருக்கணித பஞ்சாங்கம்**

மன்மத வருஷம் சித்திரை மாதம் முதலாம்திகதி (14.04.2015) செவ் வாய்க்கிழமை பிற்பகல் 01.47 மணிக்கு மன்மத என்னும் பெயருடைய புதுவருடம் பிறக்கிறது. அன்று நட்சத்திரம் அவிட்டம் 2 ஆம் கால், திதி அபரபட்ச தசமி, இது 60 வருட சுற்று வட்டத்தில் 29ஆவது வருட ாகும். அன்று காலை 9.47 மணிமுதல் மாலை 5.47 மணிவரை மேட சங்கிர மண புண்ணிய காலமாகும். வருடம் பிறக்கும்போது உதய லக்கினம் கடகம் ஆகும்.

**சங்கிரமதோச நட்சத்திரங்கள்**

மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம் , ஆயிலியம், சித்திரை, உத்தராடம் 2,3,4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் கால்கள்.

**மருத்துநீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீக்கு பால், கோசலம், கோம யம், கோரோசனை, மஞ் சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்தி லிட்டு காய்ச்சிக் கொள்க.

## புதுவருட கைவிசேஷ தினங்கள்

| வாக்கிய பஞ்சாங்கம் | | |
|---|---|---|
| 15.04.2015 | புதன் | முற்பகல் 9.57-10.15 மணிவரை |
| 15.04.2015 | புதன் | முற்பகல் 10.23-11.58 மணிவரை |
| 15.04.2015 | புதன் | பிற்பகல் 2.10-4.06மணிவரை |
| **திருக்கணித பஞ்சாங்கம்** | | |
| 15.04.2015 | புதன் | காலை 7.52-9.50 மணிவரை |
| 15.04.2015 | புதன் | முற்பகல் 10.00-11.50 மணிவரை |
| 17.04.2015 | வெள்ளி | காலை 6.01-6.49 மணிவரை |

# வாடாமல்லிகை நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அண்ணா தொழிலக வளர்ச்சியும் எழுச்சியும் பற்றிய வாடாமல்லிகை நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் பொது நூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக் குருக்கள், சிவஸ்ரீ இ. உருத்திரமூர்த்தி குருக்கள் மற்றும் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்கவுள்ளனர். தொடக்கவுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வழங்க வுள்ளார். (இ-3)


NEW TABLE MATE

புதுவருட விசேட விலைக்கழிவு.



Colours
1.Blue
2.White
3.Pink

Rs.~~5000.00~~ Rs.1699.00
Rs.~~5500.00~~ Rs.1999.00
Rs.~~6500.00~~ Rs.2999.00
Rs.~~6500.00~~ Rs.3999.00

இச்சலுகை 14.04.2015 வரை மட்டுமே.
14.04.2015 க்கு முன்னர் முற்பணம் செலுத்தி பதிவு செய்துகொள்வதன் மூலம் 30.04.2015 வரை இச்சலுகை விலையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

ADJUSTS TO:
6 Heights & 3 Angles



Gift corner fancy & stationery,
இல: 243உ A,
அரசடி வீதி,
கந்தர் மடம் யாழ்ப்பாணம்,
(கந்தர்மட சந்திக்கு அருகாமையில்)
தொ.பே: 0752820778,0776378892.


# சித்திவிநாயகர் முன்பள்ளி கட்டட திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

மாதகல் சித்திவிநாயகர் முன்ப ள்ளி கட்டடத் திறப்புவிழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கட்டடத்திறப்பு விழாவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி காமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா, வலி.தென்மேற்கு பிரதேச செயலர் சு.முரளிதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப கல்வி அலகுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கனடா மாதகல் முன்னேற்றக்கழக தலை வர் நா.சரவணன் கலந்துகொள்ள வுள்ளார்.

இந்நிகழ்வில் மலர் வெளியீடு, சேவை நலன் பாராட்டு மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள் ளன. (இ-3)

# நண்டு பதனிடும் தொழிற்சாலை ஊர்காவற்றுறையில் திறப்பு

ஊர்காவற்றுறை தம்பாட்டியில் ரூபா இரண்டு கோடி முப்பது இலட் சம் ரூபா செலவில் நண்டு பதனி டும் தொழிற்சாலை கடந்த புதன்கி ழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் அனுசரணையுடன் நோர்வே நாட்டின் நிதிப்பங்களிப் புடன் உருவாக்கப்பட்டுள்ள இத்தொழிற்சாலை, தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சுவையும் போசாக்கு மிக்க துமான நண்டுக்கு சர்வதேச அள வில் பெரும் சந்தை வாய்ப்பு உள் ளது. ஆனால், உரிய பதனிடும் வசதி இல்லாததால் குடாநாட்டில் பிடிக்கப்படும் நண்டுகள் உள்ளூர் மக்களினாலேயே நுகரப்பட்டு வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு நண்டுகளை ஏற்றுமதி செய்யும் நோக்கிலேயே இந்நண்டு பதனிடும் தொழிற்சாலை உருவாக்கப்பட்டு ள்ளது.

தீவகக் கடற்பரப்புகளில் மாத்திரம் அல்லாமல் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் பிடிக்கப்படும் நண்டுகளையும தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கொள்வனவு செய்து இத்தொழிற்சாலையில் பதனிடவுள்ளது. இதன் பின்னர் பதனிடப்பட்ட நண்டுகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டு தகரக் கொள்கலன் களில் அடைக்கப்பட்டு வெளிநாடுக ளுக்கு ஏற்றுமதி செய்யப்படும். நண்டு ஏற்றுமதியின் மூலம் நாட்டுக்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தருவதோடு, தம்பாட்டி கிராமத்தில் உள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பையும் இத்தொழிற்சாலை வழங்க உள்ளதாக தம்பா ட்டி கிராமிய கடற்றொழிலாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நவீன வசிதிகளுடன்கூடிய இந் நணடு பதனிடும் தொழிற் சாலையை இலங்கைக்கான நோர்வேத் தூது வர் கிரற் லோஹீன், ஐக்கியநாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகமும், ஐக்கிய நாடுகள் அபி விருத்தித் திட்டத்தின் உயர் நிர்வாக அதிகாரியுமான ஹோலியாங் சூ, ஐக்கியநாடுகள் சபையின் இலங் கைக்கான வதிவிடப் பிரதிநிதி சுபினை நந்தி மற்றும் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்துள்ளனர்.

இத்தொழிற்சாலை அமைந்துள்ள ஏழு நெல்பரப்புக் காணியையும் அமரர் பொன்னுச்சாமி குமாரசாமி என்பவரின் ஞாபகார்த்தமாக அவரது குடும்ப உறவினர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 46 1/4 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4393 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 18 1/2<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA<br>தொ.இ: G/3474 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 27 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: B/4394 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 34 1/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/863 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 63<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்: A/L/ முகாமையாளர்<br>தொ.இ: B/4395 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 20<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/875 |
| பிறப்பு: 1965 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 25 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: B.COM/ சுவிஸ் PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4397 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, MED/ ஆசிரியர்<br>தொ.இ: G/4885 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலகம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரின் நலன்கருதி இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகம் வடமாகாண முதியோர் நலன் கருதி கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளது.

இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள யாழ். சென்.ஜோன்ஸ்அம்புலன்ஸ் காரியாலய கூடத்தில் நடைபெறவுள்ளது. தலைநகர் கொழும்பில் மேற்படி கழகம் தனது சேவைகளை மேற் கொண்டு வந்தது.

இந்நிலையில் வடமாகாணத்தில் முதியோர் வைத்தியத்திற்கான சிறப்பான வைத்திய வழிகாட்டல் நிலையமோ வைத்தியரோ இல்லாமை மற்றும் யுத்தகால சூழல் என்பவற்றினால் பலவிதமான நோய்களின் மத்தியில் முதியோர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

எனவே அவர்களின் நலன்களைப் பேண உதவும் பொருட்டு மேற்படி கலந்துரையாடலில் பங்குகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு இலங்கை முதியோர் சுகவாழ்வு கழகத் தலைவர் க.கணேசமூர்த்தி கேட்டுள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 077 6068 656 அல்லது 021 225 5644 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். (இ-3)


# தேர்த்திருவிழா 14 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை - கலட்டி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெறும்.

மறுநாள் 15 ஆம் திகதி தீர்த் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு அண்மையில் வழங்கப்பட்ட இரத்ததான நிகழ்வின்போது...

(படம்:மாவடி முகவர்)

## யாழ். குடாநாட்டு குடிநீர் நெருக்கடி குறித்து

# எந்தவொரு விடயத்தையும் மறைக்க வேண்டிய தேவை வடக்கு மாகாண சபைக்கு இல்லை-முதலமைச்சர் விக்கி

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டு குடிநீர் நெருக்கடி தொடர்பாக எந்தவொரு விடயத்தையும் மறைக்க வேண்டிய தேவையோ அழுத்தங்களோ எமக்கில்லை எனவும் மாறாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடமாகாண சபை உறுப்பினர்கள் பொதுமக்களின் பிரச்சினைக்கு உண்மையானதும் நிரந்தரமானதுமான தீர்வினைக் காணும் நோக்குடன் இதுவரை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**நிரந்தரத்தீர்வே மாகாண சபையின் நோக்கம்**

குடா நாட்டின் சில பிரதேசங்களில் நில த்தடிநீர் மாசடைந்திருப்பது தொடர்பில் பொதுமக்களின் கரிசனைகள அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த பல்வேறு தரப்பினரும் முயன்று வருவதுடன் இது தொடர்பில் வடக்குமாகாண சபை அசமந்தப் போக்கில் உள்ளது போன்ற தோற்றப்பாட்டை உருவாக்க முனைந்து வருவதைக் காணக கூடியதாக உள்ளது. அவர்களுடைய நடவடிக்கைகள் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதை நோக்கிச் செல்லாது பிரச்சினைக்கான குற்றச்சாட்டினை எம்மீது முன வைப்பதனை மையமாகக் கொண்டு நகர்ந்து செல்கின்றது. இவ்வாறான செய்கைகள் குடிநீர்ப் பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வினைப் பெற்றுத்தரப் பயன்படப் போவதில்லை என்பதுடன் பொதுமக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளுகின்ற ஒரு முயற்சியாகவே அமைந்துள்ளன.

**நீண்டகாலப் பிரச்சினை**

குடாநாட்டின் நிலத்தடி நீர்ப் பரப்பில் எண்ணெய் போன்ற மாசுக்கள் கலந்திருக்கின்றது என்ற செய்தி புதியதல்ல. 2008 ஆம் ஆண்டிலேயே யாழ்.மாவட்டத்தின் அப்போதைய அரசாங்க அதிபர் இது குறித்து கடிதம் ஒன்றின் மூலம் இலங்கை மின்சாரசபைக்கு இது பற்றித் தெரியப்படுத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் குடாநாட்டின் சில பிரதேசங்களில் எண்ணெய்க்கசிவு உள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது. ஆயினும் இது தொடர்பில் பூரணமான ஆய்வுகள் செய்யப்பட்டு முழுமையான அறிக்கைகள் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**தூயநீருக்கான விசேட செயலணி**

இந்நிலையில் பொதுமக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு உண்மையானதும் பூரணமானதும் நிரந்தரமானதுமான ஓர் தீர்வினைக் காணும் பொருட்டு நீண்டகால மற்றும் உடனடித் தீர்வு நோக்கி வடக்கு மாகாண சபையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதில் முதலாவதாக, 9 பேர் கொண்ட தூயநீருக்கான விசேட செயலணி ஒன்று உருவாக்கப்பட்டது. வடக்குமாகாண சுகாதார அமைச்சர் மற்றும் வடமாகாண விவசாய அமைச்சர் ஆகியோரை இணைத்தலைவர்களாகக் கொண்ட இச்செயலணியில் வடக்கு மாகாண மற்றும் வேற்று மாகாண நிபுணர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இவர்கள் இப்பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்துபூரண அறிக்கை ஒன்றினை ஏப்ரல் மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

ஓர் தற்காலிகத் தீர்வாக பாதிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகம் ஒன்றினை மாகாணசபை உள்ளூராட்சி அமைப்புக்களுக்கு ஊடாக ஆரம்பித்து அதனைத் திறம்பட செயற்படுத்தி வருகின்றது.

இதனது இன்னொரு நடவடிக்கையாக நீரில் கலந்திருக்கக் கூடிய எண்ணெயின் அளவுகளை மிக விரைவாக கண்டறியக்கூடிய இயந்திரம் ஒன்றின் தேவையினைக் கருத்தில் கொண்டு நிபுணர் குழுவின் சிபார்சிற்கமைய புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் பொருத்தமான இயந்திரம் ஒன்றினை பெற்றுக்கொடுக்கவும் வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்திருந்தது. இதன் பயனாக நிபுணர் குழுவிடம் இருந்து இடைக்கால அறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆயினும் இது ஓர் இடைக்கால அறிக்கை மாத்திரமே. இறுதி அறிக்கை வரும் வரை காத்திருப்பதே பொருத்தமான செயலாகும். அதனை இம்மாத இறுதியில் பெற்றுக்கொள்ளலாம் என நம்பப்படுகிறது. அதுவரை குறித்த கிணறுகளில் இருந்து நீரைக் குடிக்காதிருப்பதே உசிதம்.

**முதலமைச்சரின் தலைமைத்துவம்**

இந்நிலையில் தூயநீருக்கான விசேட செயலணிக்கு என்னைத் தலைமைதாங்கும்படியும் அதன் செயற்பாடுகளில் நேரடியாக தொடர்புபடும்படியும் சிலர் வலியுறுத்தி வந்தனர். சிறப்பான நிர்வாகம் என்பது பொருத்தமான அதிகார பகிர்ந்தளிப்பின் மூலமே சாத்தியப்படும். இந்த வகையில் இத்துறையுடன் தொடர்புடைய இரண்டு அமைச்சர்களுக்கு இவ் விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை இடுவதற்கான அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக துறைசார் வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்று இது தொடர்பில் ஆய்வினை மேற்கொண்டு வருகின்ற வேளையில் இவ் விடயம் பற்றி ஊடகங்களுக்குத் தொடர்ச்சியாகக் கருத்துக்களை தெரியப்படுத்துவதன் மூலம் பிரபலம் தேடவேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை யாதலால் பொருத்தமான அதிகாரப் பகிர்ந்தளிப்பைச் செய்து இறுதி அறிக்கை வரும் வரை காத்திருக்க முடிவுசெய்திருந்தேன். நேற்றைய தினம் ஆளுநர் தம் முடன இணைந்து இது சம்பந்தமாகச் செயற்படும்படி கேட்டபோது கட் டாயமாக நாங்கள் எங்கள் ஒத் துழைப்பை எங்கள் மக்கள் நலன் கருதி வழங்குவோம் என்று கூறினேன். எனினும் சிலரின் நடவடிக்கைகளை ஆழ்ந்து ஆராய வேண் டியுள்ளது.

**உள்நோக்கம் கொண்ட செயற்பாடுகள்**

தேர்தல் காலங்களில் ஏதாவது ஒரு பிரச்சினையைக் கையில் எடுத்து அதன்மூலம் மக்களிடம் தமது செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள முனைவதும் தேர்தலுக காகத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வதும் வழக்கமான ஒன்றேயாகும். அந்த வகையில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை நோக்காகக் கொண்டு சில அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகள் நேரடியாகவும் சில அமைப்புக்களைப் பயன்படுத்தி மறைமுகமாகவும் குடாநாட்டு குடிநீர்ப்பிரச்சினையைக் கையில் எடுத்து கொண்டதுடன் மக்களைத் தேவைக்கதிகமாகப் பதற்றமடைய வைத்து வருகின்றார்கள் என்று கருதமுடிகின்றது. அவ்வாறானவர்கள் தயவு செய்து மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை அரசியலாக்கி மக்களைப் பதற்றமடையச் செய்யாதீர்கள் எனக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**தீர்வை முன்வையுங்கள்**

குடிநீர்ப் பிரச்சினை பற்றி பிரஸ்தாபிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் வெறுமனே ஊகங்களின் அடிப்படையில் பிரச்சினையைப் பெரிதுபடுத்தி கருத்துக்களை வெளியிடுவதிலும் அதன்மூலம் மக்களை பதற்றமடையச் செய்யும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகிறார்களே தவிர யாழ் குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சினையை எவ்வாறு அணுகலாம், அதற்கான நிரந்தர தீர்வினைக் காண்பதற்கு என்ன செய்யலாம் என்பது பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்கள் எதனையும் இதுவரை முன்வைக்கவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு பிரச்சினையை பெரிதுபடுத்துவது இலகு. ஆனால் அதன் மூலம் பொதுமக்களுக்கு எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை. இப் பிரச்சினையில் உண்மையான அக்கறை கொண்டுள்ள சூழலியலாளர்கள், துறைசார் வல்லுநர்கள் பொதுமக்கள் மற்றும் அமைப்புக்கள் இப்பிரச்சினை தொடர்பில் தமது ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைப்பதே பொது மக்களுக்கு நன்மை பயக்கும் என நான் கருதுகின்றேன். இதனால் தான் ஆளுநருடன் நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு சகலரையும் அழைத்து ஒரு கூட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளேன்.


நிறைவாக குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சினையில் அக்கறை கொண்ட தரப்பினர் இது குறித்து வெறுமனே பத்திரிகை அறிக்கைகளையும் எதிர்மறையான கருத்துக்களையுங் கேட்டு விட்டு கவனயீர்ப்பு போராட்டங்களை மாத்திரம் மேற்கொள்ளாது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான பங்களிப்புக்களை வழங்கும் பொருட்டு வடமாகாணசபையுடனும் ஆளுநருடனும் இணைந்து செயலாற்ற முன்வருதல் அவசியம். அதுவே இன்றைய தேவையுங் கூட.

பொதுமக்களே! குடாநாட்டு குடிநீர் நெருக்கடியில் எந்த ஓர் விடயத்தையும் நாம் மறைக்க வேண்டிய தேவையோ அழுத்தங்களோ எமக்கில்லை. மாறாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட இவ் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பொதுமக்களின் பிரச்சினைக்கு உண்மையானதும் நிரந்தர தீர்வினைக் காணும் நோக்கத்துடனும் இதுவரை பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. எதிர்காலத்திலும் அவசியமான நடவடிக்கைகளை எடுக்க முயன்று வரும். அதுவரை பொறுமை காத்து குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வினை நோக்கி முன்னகர வடக்கு மாகாண சபையுடன் கைகோர்க் குமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன். தீர்வு கிடைக்கும் வரையில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குத் தூயநீர் தொடர்ந்து கொடுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேசும் படம்-65

இடம்: அச்செழு



இப்படியும் பிரயாணம் செய்யலாம்

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.16
தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம், வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்: எல்.தனுஸ், அச்செழு.

# கடந்தகாலங்களில் தொழில்தேடி திரிந்தவர்கள் இப்பொழுது மகிந்தவைத்தேடி திரிகின்றனராம்

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஊர் பக்கம் சென்றால் மக்கள் கேட்பது தொழில் வேண்டும், பாதைகள் அமைத்து தரவேண்டும் என்றே. ஆனால் இன்று மகிந்த வேண்டுமென்று மாத்திரமே கேட்கிறார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார். என்னை பார்ப்பதற்கு இன்றும் என் ஊர் மக்கள் வரு கிறார்கள்.

நான் சென்று அமைச்சர் பதவி பெற்றால் மக்கள் என்னை கல்லால் அடிப்பார்கள். கடந்த காலங்களில் மக்கள் அதை செய்து தரவேண்டும், இதனை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டே இருப் பார்கள் செய்து தராவிட்டால் எங் களை மக்கள் திட்டித்தீர்ப்பார்கள்.

இன்று மக்கள் ஒன்றையும் கேட்பதில்லை. மகிந்தவை மீண் டும் அழைத்து வருவீர்களா என்று மாத்திரம் கேட்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# எதிர்க்கட்சித் தலைவர் யாரென்பதை புதுவருடத்தின் பின் அறிவிக்கப்படும்

தமிழ், சிங்கள புதுவருடத்தின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது அறிவிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டமைப்பின் 14 கூட்டணி கட்சிக ளுடனும் தனித்தனியாக பேச்சு வார்த்தை நடத்தப்படும்.

பேச்சுவார்த்தையின் பின்னர் யார் எதிர்க்கட்சித் தலைவர் என்பது குறித்து அறிவிக்கப்படும்.

எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்யும் பொறுப்பினை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ என்னிடம் ஒப்ப டைத்துள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக் கும் அனைத்து கட்சிகளுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

புத்தாண்டின் பின்னர் கட்சிக ளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, பொருத்தமான எதிர்க்கட்சித் தலை வர் ஒருவரின் பெயரை வெளி யிட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்காக எவ்வளவு கால அவ காசம் தேவை என்பதனை திட்ட வட்டமாக கூற முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந் திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள் ளார். (இ-5)

# க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள்- 2014

**யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்**

ஸ்ரீ.தக்ஷாயனி-ஏ2பி3சி3எஸ், ஜெ. தனுயன்-2ஏ2பி4எஸ்- கு.பிரதீப்-பி4சிஎஸ், ஆ.வித்யா-பி2சி3எஸ், அ.தஜீபன்-3சி3 எஸ், சி.சிவகாமி-3சி3எஸ்.

**யா/புற்றளை மகா வித்தியாலயம், புலோலி**

ஜெ.குணசீலன்-ஏ2பி2சி3எஸ், கே. நிரோஜன்-ஏபி4சி2எஸ், கே.பிர தாபன்-பி5சி2எஸ், கே.பிரதீபன்- பி2சி5எஸ், ஆர்.துஷ்யந்தன்-3ஏ3பிசி2எஸ், எஸ்.ஜனனி- ஏ2பி2சி4எஸ், என்.குகேதா-ஏபி5சிஎஸ், கே.றொசாந்தினி-பி2சி5எஸ், வி.புருஷோத்மன்-ஏ2பி2சி2எஸ்,

# வடக்குமக்கள் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகவுள்ளது

## யாழ். இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தின் சுகாதார வளர்ச்சிக்கு இந்திய அரசாங்கம் பல்வேறு உதவித்திட்டங்களை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்துள்ளதாக தெரிவித்துள்ள யாழ். இந்தியத் தூதுவர் என். நட்ராஜ் அவ்வுதவிகளை தொடர்ந்தும் வடக்கு மக்களுக்கு இந்திய அரசு வழங்கும் எனவும் வடக்கு மக்கள் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பம் எனவும் தெரிவித்துள்ளார்.**





ஐ.ஓ.சி.பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட யாழ்.திருமறைக்கலாமன்றத்திற்கு அருகாமையில் உள்ள ஜுப்ளி ஆரம்ப சுகாதார நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மக்கள் மகிழ்ச்சியாக வாழ வேண்டு மென்பதே எமது விருப்பம். இந்திய அரசு சுகாதார திட்டங்களினை இலங்கையில் நீண்ட காலமாக மேற்கொண்டு வருகின்றது. விசேடமாக தமிழ் மக்கள்வாழும்பகுதியானவடக்குமாகாணத்திலும் பல்வேறு சுகாதார திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வைத்திய உபகரணங்களையும் இந்திய அரசு வழங்கியிருந்தது. இதேபோல் வடக்கில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் இந்திய அரசாங்கம் பல்வேறு உதவிகளை வழங்கியிருந்தது. இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வவுனியா வைத்தியசாலையும் எதிர்வரும் காலத்தில் திறந்து வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஜூன் மாதம் இருபத்தொராம் திகதியன்று சர்வதேச யோகா தினம் கொண்டாடப் படவுள்ளது. இத்தினத்தை முன்னிட்டு யாழ்.இந்திய துணைத்தூதரகமும் சர்வதேசயோகாதினத்தை கொண்டாட தீர்மானித்துள்ளது. இதன் போது வடக்கு மக்களும் இதில் கலந்து கொண்டு பயன்பெற முடியும்.

அன்றைய தினம் யாழ்.இந்திய துணைத்தூதரகத்தில் வழங்கப்படுகின்ற யோகா தொடர்பிலான பயிற்சிகளையும் இலவசமாக பெற்று அனைவரும் பயனடைய முடியுமென யாழ்.இந்திய துணைத்தூதர் மேலும் தெரிவித்தார். (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்து ஆலயங்களில் புத்தரிசிப் பொங்கல்

எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிறக்கின்ற மன்மத புதுவருடத்தை முன்னிட்டு மதத் தலங்களில் புத்தரிசிப் பொங்கல் படைத்து விசேட பூஜைகளை நிகழ்த்தும் வைபவம் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை இலங்கையின் பிரதான மதத் ஸ்தானங்களில் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் அரச வைபவம் அன்றைய தினம் முற்பகல் 10 மணி முதல் 10.35வரை அமையும் சுப நேரத்தில் சரித்திரப் பெருமை மிக்க பொலநறுவை சோமாவதி பௌத்த விகாரையில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இலங்கையின் இந்து ஆலயங்களில் காலை புத்தரிசிப் பொங்கலிட்டு விசேட பூஜைகளை மேற்கொள்ளுமாறு புனர்நிர்மாண மீள்குடியேற்ற இந்து விவகார அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் அறிவித்துள்ளார்.

அதற்கமைய இந்து ஆலயங்களின் பரிபாலன சபையினர், தத்தம் ஆலயங்களில் புத்தரிசிப் பொங்கல் படைத்து நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை நாடி பூஜை மற்றும் பிரார்த்தனை வழிபாடுகளை மேற்கொள்ளுமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கேட்கப்பட்டுள்ளது. (இ-3)




# ஈழக்கோரிக்கையை விதைக்கும் வகையில் வடக்கு மாகாண மாணவர்களுக்கு உதவி!

**(கொழும்பு)**

**ஈழக் கோரிக்கை எண்ணக்கருவினை விதைத்து விஸ்தரிக்கும் வகையில் வடக்கு மாகாணத்தில் மாணவர்களுக்கு புலம்பெயர் அமைப்புக்கள் சில உதவிகளை வழங்கி வருவதாக சிங்கள பத்திரிகையொன்று குற்றஞ் சுமத்தியுள்ளது.வடக்கின் மாணவர்களை இந்தப் புலம்பெயர் அமைப்புக்கள் இலக்கு வைத்து வருவதாக அதில் மேலும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.**

## சிங்கள ஊடகம் தகவல்

ஈழக் கோரிக்கைக்கு வடக்கு மாணவர்களின் ஆதரவினை திரட்டும் நோக்கில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்கள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரின் சிவன் கோயிலுடன் தொடர்புடைய தமிழர் அமைப்பு ஒன்றே இவ்வாறு மாணவர்களுக்கு உதவிகளை வழங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்த அமைப்பு வல்வெட்டித்துறையில் 200 சைக்கிள்களை மாணவர்களுக்கு வழங்கியுள்ளது.

இந்தக் கோயிலின் ஊடாக கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வீடியோ விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை குற்றஞ் சுமத்தியுள்ளது.

வல்வெட்டித்துறை மாரியம்மன் கோயிலில் இந்த சைக்கிள் விநியோக நிகழ்வு நடைபெற்றுள்ளது எனவும் இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் சூரிக் சிவன் கோயில் நிர்வாகத்தினர் இதுவரையில் எவ்வித பதிலையும் வெளியிடவில்லை எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.(இ-5)

# கோத்தபாய மூலம் அவன்கார்ட் நிறுவனத்தில் இணைந்த முன்னாள் இராணுவ அதிகாரிக்கு கொலை அச்சுறுத்தல்

அவன்கார்ட் நிறுவனத்தில் கடமையாற்றிய தனக்கு நிறுவனத்தின் நிர்வாகம் கொலை அச்சுறுத்தல் விடுப்பதாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி உதய திஸாநாயக்க மிரிஹான பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், நான் கோத்தபாய ராஜபக்ஷ ஊடாக அவன்கார்ட் நிறுவனத்தில் சேவையில் இணைந்து கொண்டேன். நான் கென்யா நாட்டில் பணியாற்றினேன்.

அதேபோல் நிறுவனத்தின் கொழும்பு அலுவலகத்தில் பணியாற்றினேன். எனக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. ஏனைய கொடுப்பனவுகளும் வழங்குவதாக கூறிய சம்பளமும் கிடைக்கவில்லை.

எதிர்வரும் நாட்களில் இந்த நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட பெரிய திருடனை பிடித்து கொடுப்பேன். இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரிய கொள்ளை இது.

நிஷ்சங்க சேனாதிபதி என்னை தீய வார்த்தைகளால் திட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்து வருகிறார். அவரது உதவியாளர் ஒருவர் என்னை பின் தொடர்கிறார். இதன் காரணமாகவே நான் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் இந்த முறைப்பாட்டை செய்தேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# இந்திய சோதிடரை நாடுகிறார் மகிந்த

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமது சோதிடக்காரரை மாற்றியுள்ளார்.

முன்னர் அவரின் சோதிடக்காரராக சுமனதாஸ அபேகுணவர்த்தன செயற்பட்டு வந்தார்.

எனினும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவர் கூறிய எதிர்வு மாறுபட்டு மகிந்த ராஜபக்ஷ தோல்விகண்டதன் பின்னர் மகிந்த ராஜபக்ஷ சுமனதாஸவை கைவிட்டார்.

தற்போது அவர் இந்த சோதிடக்காரர் ஒருவரிடமே தமது கிரக நிலையை பார்த்துக்கொள்கிறார்.

இந்தநிலையில் புதிதாக மகிந்தவுக்கான கிரகநிலையை பார்த்துக்கூறும் இந்திய சோதிடர் யார் என்ற விடயம் இன்னும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பொதுத் தேர்தலில் வெற்றியைப்பெற்று அரசியலமைப்பை திருத்தம் செய்வோம்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின் ஆட்சி அதிகாரத்தினை கைப்பற்றியவுடன், புதிய அரசியல் யாப்பு திருத்தம் செய்யப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



உயர் நீதிமன்றம் சுதந்திரமாக தீர்ப்பு வழங்கியுள்ளதாகவும், 19ஆவது திருத்தம் குறித்து உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை முழுமையாக ஏற்றுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் நியாயமான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். (இ-5)

# அமைச்சர் பதவி பெற்ற சு.கவினரை மீண்டும் இணைத்துக் கொள்வேன்

## தினேஷ் தெரிவிப்பு

தான் எதிர்க்கட்சி தலைவரானால் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைச்சர்களை மீண்டும் எதிர்க்கட்சிக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவ்வாறு எதிர்க்கட்சியில் இணையாத உறுப்பினர்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியுடன் செயற்படலாம்.

எதிர்க்கட்சியில் இருப்பதென்றால் அரசாங்கத்தில் பதவி பெறாதவர்களாக இருக்க வேண்டும்.

உண்மை நிலையை அறியாத ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்துகொள்ள பல காலமாக எதிர்பார்த்தவர்களே அமைச்சர் பதவிகள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியுடன் செயற்பட விரும்பியவர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடனே செயற்பட முடியும்.

எப்படியிருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இதுவரை பிளவுபடவில்லை.

எதிர்க்கட்சி தலைவராக முயற்சிப்பது முன்னாள் ஜனாதிபதியை மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வரும் முயற்சியிலா என அவரிடம் வினவப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றும் பிரபல்யமான அரசியல் தலைவர்.

எங்கள் நம்பிக்கை எதிர்வரும் பயணத்தில் மக்களுடன் இணைந்து நாட்டில் வெற்றியான பயணத்தை மேற்கொள்வதே என அவர் பதிலளித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் பிரதேச சபையின் செயற்பாட்டில் வடக்கு முதலமைச்சர் தலையிடவேண்டும்

## பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கை

(மல்லாவி)

**தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட துணுக்காய் பிரதேச சபையின் தவிசாளரின் அசமந்த செயற்பாடுகள் காரணமாக பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்குவதுடன் வீதி விபத்துக்களுக்கும் உள்ளாகி வருகின்றோம். எனவே வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இப்பிரதேச சபையின் செயற்பாட்டில் நேரடியாகத் தலையிட்டு தமக்குத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் பிரதேசசபையின் எதிர்க்கட்சி மற்றும் ஆளும்கட்சி உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மல்லாவி நகர பகுதியில் கடந்தாண்டு தேசிய நீர்வழங்கல் அதிகார சபையினால் பாரிய நீர்த்தொட்டி ஒன்று அமைக்கப்பட்டு மக்களுக்கான குடிநீர் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்தின்போது குடிநீர் குழாய்களைப் பொருத்துவதற்காக அனிஞ்சியன் குளம் , திருநகர், மங்கைநகர், யோகபுரம் ஆகிய கிராமங்களுக்கு செல்லும் சீமெந்துக்கலவை இடப்பட்ட பிரதான வீதிகள் மற்றும் கிளை வீதிகளை ஊடறுத்து குழாய்கள் பொருத்தப்பட்டன.

இதன்போது வீதிக்கு குறுக்காக வெட்டப்பட்ட கிடங்குகளை தார்க்கலவை இட்டு மூடுவதற்காக ஊடறுத்த குழாய்கள் பொருத்தப்பட்ட வீட்டின் உரிமையாளர்களிடமிருந்து தலா இரண்டாயிரத்து 400 ரூபா வீதம்பலஆயிரக்கணக்கானபணம்பிரதேசசபையினரால் அறவிடப் பட்டது.

ஆயினும் இன்று வரை வீதியில் தோண்டப்பட்ட கிடங்குகளுக்கு தார்க்கலவை இடப்பட்டு மூடப்படவில்லை.

இதனால் பாதசாரிகள் முதல் கனரக வாகனங்களில் செல்வோர் விபத்துக்களை சந்திக்கின்றனர்.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேசசபையின் மாதாந்த ஒன்றுகூடலின்போது பாதிக்கப்பட்ட மக்கள் ஆளும் தரப்பினர் மற்றும் எதிர்க்கட்சியினர் இவ்விடயம் குறித்து தவிசாளரிடம் சுட்டிக்காட்டியபோது நடவடிக்கை மேற்கொள்வதாக வாக்குறுதி அளித்து வருடங்கள் கடந்த நிலையிலும் வேலைகள் நிறைவு பெறவில்லையென பாதிக்கப்பட்டவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தை வடக்கு மாகாண முதலமைச்சர் கவனத்தில் கொண்டு பிரதேசசபையின் மக்கள் சார்ந்த பணிகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக ஆய்வுகள் நடத்தி நடவடிக்கை மேற்கொண்டு உதவவேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் பிரதேசசபையின் ஆளும் தரப்பினர் மற்றும் எதிர்த்தரப்பினர் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (2-15)

## அனுமதிப்பத்திரமின்றி வெட்டப்பட்ட மரக்குற்றிகள் மாட்டின பொலிஸாரிடம்

### சாரதி தப்பியோட்டம்



கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் டிப்பர் ரக வாகனத்தில் சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்லப்பட்ட 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில், பொலிஸார் துரத்துவதைக் கண்டதும் டிப்பர் வாகனத்தை விட்டு விட்டு வாகன சாரதி தப்பி ஓடிவிட்டார். முல்லைத்தீவு கோட்டை கட்டிய குளப் பகுதியில் இருந்து அனுமதிப்பத்திரமின்றி வெட்டி கொண்டு வரப்பட்ட முதிரை மரக்குற்றிகளே இவ்வாறு நேற்று முன் தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாகனமும், மரக்குற்றிகளும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டதுடன, தப்பியோடிய சாரதியை கைது செய்வதற்கான நடவடிக்கை களை மேற்கொண்டு வருவதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (2)

## தமிழ் மாமன்றம் நடத்தும் தமிழ் மாருதம் நாளை

(வவுனியா)

தமிழ் மாமன்றம் நடத்தும் முத்தமிழ்ச் சங்கமமான தமிழ் மாருதம்–2015 நாளை ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை இரு அமர்வுகளாக வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் காலை அமர்வு 8.45 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 12.30மணிக்கு நிறைவுபெறும். மாலை அமர்வு பி.ப.4மணிக்கு ஆரம்பமாகி இரவு 7.30மணிக்கு முடிவுபெறும்.

அன்றையதினம் காலை அமர்வின் ஆரம்ப நிகழ்வின் ஊர்வலம் வவுனியா பொது நூலக சரஸ்வதி சிலையிலிருந்து ஆரம்பமாகி வவுனியா கலாசார மண்டபத்தை வந்தடையவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்று தலைமையுரையை தமிழ் மாமன்ற தலைவர் இரா.இராஜேஸ்வரன் நிகழ்த்துவார்.

தொடக்கவுரையை மனநல மருத்துவநிபுணர்எஸ்.சிவதாஸ்ஆற்றுவார்.

தொடர் நிகழ்வாக இலக்கியங்கள் எமக்கு அதிகமாகக் கற்றுக் கொடுத்தவை எனும் தலைப்பில் சுழலும் சொற்போர் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு நடுவராக துணைவியூர் கேசவன் செயற்படவுள்ளார்.

'வீரத்தின் உயர்வினை' ஜெசிதா ஆனந்த மூர்த்தியும் 'பொறுமையின் பெருமையை' கஜிதா வரதராசாவும் 'துரோகத்தின் தன்மையை' கருணாகரன் தனுசயனும் 'தனிமையின் கொடுமையை' விபுசாயினி பரலோகநாதனும் 'பெண்மையின் ஆற்றலை' துர்க்காஜினி தெய்வேந்திரனும் 'காதலின் மகிமையை' தமிழ்ச் செல்வன் கிரிதரனும் ஆற்றவுள்ளனர்.

கலைநிலாக் கலையக நெறியாள்கையில் ஆண்பால் நாடகமும் மு/வற்றாப்பளை ம.வி.ஆசிரியர்களின் நெறியாள்கையில் நாட்டார்பாடல் ஆகிய கலைநிகழ்வுகள் நடைபெறும்.

மாலை அமர்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகி தொடக்கவுரையை வவுனியா முன்னாள் அரசாங்க அதிபர் உடுவை எஸ்.தில்லை நடராசா ஆற்றுவார்.

தொடர் நிகழ்வாக 'சும்மா இருக்க சுகமான இடம்' எனும் தலைப்பில் கவியரங்கம் கவிஞர் சடாகோபன் தலைமையில் நடைபெறும்.

'வயல்வரப்பு' பா.திலீபன், 'நிலா முற்றம்' பொ.நிருபிதா, 'கோவில் பிடி' இரா. இராஜேஸ்வரன், 'சைக்கிள் பார்' த.மோகனரங்கன், 'வீட்டுத்திண்ணை' ந.அகிலன், 'குளக்கட்டு' செ.மதுரகன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

வவுனியா நிருத்திய நிகேதன கலாமன்ற இயக்குநர் அருந்தவநாயகம் சுஜேந்திராவின் நெறியாள்கையில் 'ஆணவவதம்' எனும் நாட்டிய நாடகம் நடைபெறும்.

'மாயையின் சூழ்ச்சியிலே வீழ்ந்தபின் பெரியசோகம்' எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும்.

இதன் நடுவர்களாக தமிழ் ஆசிரியர் ஜ.கதிர்காமசேகரன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் செயற்படவுள்ளனர். (2)

## சிதம்பரபுரத்தில் காணிகளை வழங்கிவிட்டு அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி தருவோம்

### மக்கள் சந்திப்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிப்பு

(குருமன்காடு)

இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் வவுனியா, சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களை வைத்து அரசியல் நடத்த சில அரசியல்வாதிகள் முயல்வதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

வவுனியா, சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்திற்குச் சென்று அங்குள்ள மக்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

உங்களது துன்பமும் பிரச்சினையும் எமக்கும் முதலமைச்சருக்கும் நன்கு தெரியும்.

அதனாலேயே அவர் கடந்த ஜனவரி மாதம் உங்களை சந்தித்த போது இக்காணிகளை உங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும், இங்கு வசிக்கும் மக்களை இங்கிருந்து வெளியேற வேண்டாம் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சிதம்பரபுரம் முகாம் மக்களாகிய நீங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளீர்கள். இது பற்றி எமக்கு அறியத் தந்தால் நாமும் உங்களுக்காக குரல் கொடுப்போம். உங்களுக்காகவே மாகாணசபை உறுப்பினர்களாகிய நாம் கதைத்து வருகின்றோம்.

மாகாண சபையின் அடுத்த அமர்வில் கூட இது தொடர்பில் ஒரு பிரேரணையை கொண்டு வந்து நிறைவேற்றி அதனை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அமைச்சர் ப.சத்தியலிங்கம் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் இது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சருடன் பேசியுள்ளார்கள். உங்களுக்கு காணிகள் விரைவில் வழங்கப்படும்.

ஆனால் உங்கள் பிரச்சினையை தாம் தீர்ப்பதாகவும், காணிகளை பெற்றுத்தர நடவடிக்கைகளை எடுப்பதாகவும் பலர் உங்களிடம் வந்து அரசியல் நடத்துகிறார்கள். ஆனால் நாம் தேர்தலுக்காகவோ அரசியலுக்காகவோ வரவில்லை. எல்லைப்புற பிரதேசத்தில் இருக்கும் உங்களுக்கு காணிகள் வழங்க வேண்டும் என்பதற்காகவே வந்துள்ளோம்.

உங்களுக்கு காணிகளை வழங்கிவிட்டு கைவிடாது வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகளையும் செய்து தருவதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனவும் தெரிவித்தார். (2-250)




## பகிரங்க ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை பகிரங்க ஏல விற்பனையொன்று காலை 9 மணிக்கு நடைபெறுமென நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

எனவே ஏலவிற்பனைக்கான பொருட்களின் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்னர் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என அவர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்




1114

## சிறந்த பக்தி!

தர்மபுரியில் ராமநாதன், கண்ணன் என்ற இரு சகோதரர்கள் தங்கள் குடும்பங்களுடன் ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.

ராமநாதன் மகா பண்டிதன்! தினமும் வீட்டில் தேவி உபாசனையும் செய்து வந்தான்.



பூஜை, புனஸ்காரங்களைத் தவிர ஆயுர்வேத வைத்தியத்திலும் சிறந்தவன்.

ஆனால் தன் வீடு தேடி வரும் நோயாளிகளுக்கு மட்டுமே சிகிச்சை அளிப்பான்.

அவனுடைய தம்பி கண்ணனும் வேதங்கள் பயின்றவன் ஆயினும், அண்ணனைப்போல் பண்டிதன் இல்லை.

மனதால் அம்பாளை நினைத்து உருகுபவன்!

அவனும்அண்ணனைப்போல் ஆயுர்வேதத்தில் சிறந்து விளங்கினான்.

ஆனால் அண்ணனைப்போல் இல்லாமல், யார் எந்த நேரத்தில் சிகிச்சைக்காக அழைத்தாலும், நோயாளிகளை கவனிக்க நேரே சென்றுவிடுவான்.

ஒருநாள் நடு இரவில் பக்கத்து கிராமத்திலிருந்து இருவர் கண்ணனைத் தேடி வந்தனர்.

அவர்களுடைய உறவினருடைய மகனின் உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும், எந்த சமயமும் இறக்கக் கூடும் என்றும் கூறி, அவனை உடனே வருமாறு அழைத்தனர்.

உடனே, கண்ணன் மருந்துப் பெட்டியை எடுத்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

பக்கத்து கிராமத்தை அடைந்து, நோயாளிக் குழந்தையின் வீட்டை நெருங்கிய போது, அந்தச் சிறுவனின் தாய் ஓலமிட்டு கதறிக் கொண்டு இருந்தாள்.

அவளை சமாதானப்படுத்திய கண்ணன், சிறுவனின் நாடி பிடித்துப் பார்த்து சோதித்தபின், தன் மருந்துப் பெட்டியிலிருந்து சில சூர்ணங்களை எடுத்து தேனில் குழைத்து சிறுவனுக்கு அளித்தான்.

ஒரு மணி நேரம் கழித்து சிறுவன் கண் விழித்தான்.

சிறிது நேரத்தில் சிறுவன் எழுந்து உட்கார்ந்து விளையாடவே ஆரம்பித்து விட்டான்.

சிறுவனின் தாய் அவனைக் கட்டியணைத்து ஆனநதக் கண்ணீர்விட, சுற்றி இருந்தவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அனைவரும் கணணனை பாராட்டினர்.

காலையிலிருந்து மும்முரமாக சிகிச்சை அளித்த கண்ணனுக்கு நண்பகல் வந்ததே தெரியவில்லை.

பசி அவன் வயிற்றைக் கிள்ள, அவர்களிடம் சாப்பிட ஏதாவது தரும்படி கேட்டான்.

சிறுவனின் பெற்றோர் சிறிது நேரம் தயங்கிய பிறகு, "நீங்கள் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்! எங்கள் வீட்டிலே சாப்பிடுவீர்களா?" என்று தயக்கத்துடன் கேட்டனர்.

"ஓ! தாராளமாக சாப்பிடுவேன்!" என்று கூறிய கண்ணன், அவர்களோடு ஒன்றாக அமர்ந்து அவரகள் அன்புடன் அளித்த உணவை சாப்பிட்டான்.

பிறகு அவர்களிடம் விடை பெற்று தன் கிராமத்தை நோக்கி நடந்தான்.

வீட்டை அடைந்ததும், ராமநாதன் அவனை உணவு உண்ண அழைத்தபோது, தான் ஏற்கனவே சாப்பிட்டு விட்டதைக் கண்ணன் அறிவித்தான்.

உடனே, ராமநாதனுக்குக் கடும் கோபம் உண்டாகியது......

(தொடரும்)

### ஆப்ரகாம் லிங்கன்



1809 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார் ஆப்ரகாம்லிங்கன். அவரது தந்தை தாமஸ் லிங்கன். குடும்ப ஏழ்மை காரணமாக லிங்கனால் சரியாக படிக்க முடியவில்லை. பிறருக்கு உதவி செய்தல், அடுத்தவர் மீது அன்பு செலுத்துதல் போன்ற அரிய குணங்கள் சிறு வயதிலேயே லிங்கனிடம் இருந் தது. எப்போதும் கலகலப்பாகப் பழகுதல் கதை சொல்லுதல் வேடிக்கையாகப் பேசுதல் ஆகிய லிங்கனின் குணாங்கள் அவர் மீது மற்றவர்களை விருப்பம் கொள்ளச் செய்தன.

தனது இருபத்து மூன்றாவது வயதில் முதன் முதல் ஆப்ரகாம்லிங்கன் பிளாக் காக் போரில் ( black hawk war ) கலந்து தலைவனாக பணியாற்றியது புதியதோர் பாதையை காட்டியது.

ஆபிரகாம்லிங்கன் ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது குடியரசுத் தலைவராவார். அடிமை முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை ஒழிக்க முனைந்தவர்களில் ஒருவர்.

1860 இல் மேற்கு மாநிலங்களில் தலைவராக இருந்த இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வெற்றி பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவைப் பிளவுபடாமல் காக்க, தென் மாநிலப் பிரிவினைக் கருத்தாளர்களை எதிர் கொண்டு உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றி பெற்றவர்.

1847 - 1849 ஆண்டுகளில் அமெரிக்க பாராளுமன்ற உறுப் பினராக பணிபுரிந்தார். 1860 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதியில் 1865 இவர் வோஷிங்டன் டி.சி யில் உள்ள ஃபோர்டு அரங்கில் ஜான் வில்கிஸ் பூத் என்பவனால் கொல்லப்பட்டார். அமெரிக்க ஒன்றியத்தின் ஒற்றுமைக்காக உயிர் துறந்து புகழ் எய்தினார்.

04.2015

11

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1079 - போலந்து மன்னன் இரண்டாம் பொலேஸ்லாவ் என்பவனின் கட்டளைக்கிணங்க கிராக்கோவ் ஆயர் ஸ்டானிஸ்லாஸ் தூக்கிலிடப்பட்டார்.
- 1831 - உருகுவேயில் சல்சிபுதிஸ் என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான சருவா இனத்தவர் படுகொலை செய்யப்பட்டனர்.
- **1865 - ஆப்ரகாமலிங்கன் தனது கடைசிப் பேச்சை நிகழ்த்தினார்.**
- 1899 - ஸ்பெயின் புவேர்ட்டோ ரிக்கோவை ஐக்கிய அமெரிக்காவுக்கு அளித்தது.
- 1905 - ஐன்ஸ்டீன் தனது சார்புக் கோட்பாட்டை வெளியிட்டார்.
- 1921 - விளையாட்டு வர்ணனை முதன்முறையாக வானொலியில் ஒலிபரப்பானது.
- 1957 - பிரித்தானியா சிங்கப்பூரின் சுயாட்சிக்கு ஒத்துக் கொண்டது.
- 1970 - அப்போலோ 13 ஏவப்பட்டது.
- 1979 - தான்சானியப் படைகள் உகண்டாவின் தலைநகரான கம்பாலாவை ஆக்கிரமித்தன. இடி அமீன் தப்பி ஓட்டம். .
- 1987 - இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் லண்டனில் கைச்சாத்தானது.
- 2002 - வெனிசுவேலாவில் ஜனாதிபதி ஹியூகோ சாவெஸ் இற்கெதிராக இராணுவப் புராட்சி இடம்பெற்றது.
- 2012 - இந்தோனேசியாவில் சுமாத்ரா கடற்பகுதியில் 8.7 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இலங்கை, தமிழ்நாடு ஆகிய இடங்களில் இலேசான நிலநடுக்கம் உணரப்பட்டது.

பிறப்புகள்

- 1869 - கஸ்தூரிபாய் காந்தி, மகாத்மா காந்தியின் மனைவி (இ. 1944)

இறப்புகள்

- 1918 - [illegible] (பி. 1849)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

103

'நான் நடிகனாவதற்குக் காரணமே என் உயிர் நண்பன் ராஜ்பகதூர்தான். அவனை என்றென்றும் மறக்கமாட்டேன்' என்று ரஜினிகாந்த் கூறினார்.

ஆரம்ப காலத்தில் தனக்கு உதவி செய்தவர்களை மறக்காதவர் ரஜினி.

ராஜ்பகதூர் பற்றி, மனம் நெகிழ்ந்து அவர் கூறியதாவது:-

'நானும், ராஜ்பகதூரும் பெங்களூரில் ஒன்றாக வேலை பார்த்தோம். நான் கண்டக்டர். அவன் டிரைவர்.

ராஜ்பகதூரிடம் எனக்குப் பிடித்த குணம், அவன் யதார்த்த மனிதன். வாழ்க்கையில் பெரிய ஆசைகளோ, 'இதைச் சாதிக்க வேண்டும், அதைச் சாதிக்க வேண்டும்' என்ற விருப்பமோ இல்லாதவன்.

எனக்கு சாராயம் பிடிக்கும். அவன் பிராந்தி போன்ற மது வகைகளைத்தான் குடிப்பான்.

நான் சாராயம் குடிக்கப்போனால், நான் திரும்பி வரும்வரை வாசலில் காத்திருப்பான். அவன் பாருக்குப் போனால், அவன் திரும்பி வரும்வரை நான் பிளாட்பாரத்தில் நின்று கொண்டு இருப்பேன்.

**சிவாஜி ரசிகர்கள்**

இவ்வளவு வேறுபாடுகள் இருந்தும் எங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்தியவர் ஒருவர். அவர்தான் நடிகர் திலகம் சிவாஜிகணேசன்!

நாங்கள் இருவருமே சிவாஜியின் ரசிகர்கள். எங்களிடையே நட்பு நெருங்குவதற்கு அதுவும் ஒரு காரணம். இருவரும் சிவாஜி நடித்த படங்களுக்கு செல்வோம். ஒவ்வொரு காட்சியிலும், சிவாஜியின் நடிப்பைப் பார்த்து பாராட்டி மகிழ்வோம்.

ராஜ்பகதூருக்கு நடிப்பில் ஆர்வம் இருந்தது. எனக்கு விருப்பம் இல்லை. 'குருசேத்திரம்' என்ற நாடகத்தை ராஜ்பகதூர் போட்டான். அதில் அவனுக்கு கிருஷ்ண பகவான் வேடம். உருவத்துக்கும், அழகுக்கும் பொருத்தமான வேடம்.

அப்போது நான் குண்டாக இருந்தேன். என்னை துரியோதனனாக நடிக்கச் சொன்னான்.

'இதோ பாரப்பா! நமக்கு நடிப்பெல்லாம் வராது' என்றேன்.


'நல்ல உடம்பு இருக்கு. கவர்ச்சியான கண் இருக்கு. மீசையும், கிரீடமும் வச்சு சும்மா வந்து நில்லு. கை தட்டல் விழும். கவலைப் படாதே!' என்றான், ராஜ்பகதூர்.

'சரிப்பா. உனக்காகப் பண்றேன். நல்லா வரலேன்னா என்னைத் திட்டக்கூடாது' என்றேன்.

**முதல் அனுபவம்**

முதன் முதலாக என்னை நாடக மேடைக்கு அழைத்துச்சென்ற பெருமை ராஜ்பகதூரையே சேரும்.

முதல் நாள் ஒத்திகைக்குச் சென்றேன். பாடி நடிக்க வேண்டிய நாடகம் அது. 'எனக்குப் பாட வராது. மாஸ்டர் பாடட்டும். நான வாயசைக்கிறேன்' என்று கூறிவிட்டு, வசனத்தை மட்டும் ராஜ்பகதூரிடம் இருந்து பெற்றுக்கொண்டேன். நன்றாக மனப்பாடம் செய்தேன்.



சிவாஜி ஸ்டைல், என்.டி.ராமராவ் ஸ்டைல் இரண்டையும் கலந்து, ஒத்திகையில் நடித்தேன். அது புதுமையாக இருந்ததால், கூடியிருந்தவர்கள் பெரிதும் ரசித்தார்கள்.

அன்று ஒத்திகை முடிந்தவுடன் ஒரு ஆச்சரியமான, அதிசயமான நிகழ்ச்சி நடந்தது. 'இன்று இவனோடு சேர்ந்து நான் சாராயம் சாப்பிடப் போகிறேன்' என்றான், ராஜ்பகதூர். சொன்னது போலவே, வாழ்க்கையில் முதல் தடவையாக என்னுடன் சேர்ந்து சாராயம் குடித்தான்.


'சாராயக்கடைக்கே வராதவன், இன்று வந்திருக்கிறேன் என்றால், அது உனக்காக - உன் நடிப்புக்காக! என்னம்மா நடிச்சே நீ! உள்ளே நுழைந்தவுடனே ஒரு சிரிப்பு சிரிச்சே பாரு! அருமை. இவ்வளவு திறமையை வச்சிக்கிட்டு நடிக்கமாட்டேன்னு சொன்னியே! நீ தொடர்ந்து நடிக்கணும்' என்றான், ராஜ்பகதூர்.

அடுத்த நாளும் என்னுடைய நடிப்புத் திறமையை மற்றவர்களிடம் சொல்லிப் பாராட்டினான். என் உள்ளே இருந்த நடிப்புக் கலையை வெளியே கொண்டு வந்தவன் அவன்.

நாடகம் அரங்கேறியது. முடிந்ததும் 'துரியோதனனாக நடித்தவரைப் பார்க்க வேண்டும்' என்று சுமார் 50 பேர் காத்திருந்தனர். இதனால் ராஜ்பகதூருக்கு ரொம்ப சந்தோஷம்.

'டேய் நான் நிச்சயமா சொல்றேன். படத்துல நடிக்க முயற்சி பண்ணு' என்று அன்று ஆரம்பித்தவன், நான் நடிகனாக ஆகும்வரை ஓயவில்லை.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து-114

...ஆடு வடவீர நாயக்கன்பட்டியில மந்திரிச்சு, பொடிநடையாப் பொழுசாய வீடு வந்து சேந்த கருவாச்சி பிள்ளையப் படுக்கப்போட்டு அடுப்புக்கூட்ட ஆரம்பிச்சா.

நெய் மாதிரி லேசாச் சீமத்தண்ணி தெளிச்சுப் பருத்திமாரப் பத்தவச்சா. மேயப் போன தொழுமாடுகளும் மந்தையாடுகளும் ஊருக்குள்ள வந்திருச்சுக.

மாட்டு மணிச் சத்தத்துல அந்தச் சாயங்காலமே நெம்பி வழியுது, இவ வீட்டு மாடுன்டு மட்டும் காங்கல; பூலித்தேவனும் வரல ; கொண்ணவாயனும் வந்து சேரல.

புல்லுக்கில்லு சேத்துப் பொழுது போயி வருவான்னு இருந்தவளுக்கு நேரம் ஆக ஆக நெஞ்சு பதறுது.

வாசலப் பாக்குறா; வாசலத் தாண்டித் தெருவுக்கு ஓடி வாரா; தெருவுக்கு வந்து வந்து திரும்பித் திரும்பிப் போறா.

வரல; வர்ற அறிகுறியும் தெரியல. நல்லா இருட்டிருச்சு.

தண்ணியக் கூடப் பத்தவச்சிரலாம் என்னியப் பத்த வைக்க முடியாதுன்னு முரண்டுபண்ற காடா வெளக்கத் திருயத் திருச்சு விட்டு, அடுப்புல கெடந்த நெருப்பெடுத்து அவ பத்த வைக்க...

தெறந்த வாசல்ல தொப்புட்டீர்ன்னு விழுந்துச்சு என்னமோ.

என்னாது அது? வெளக்கோட ஓடி வந்து பாத்தா.

நெளி நெளி நெளின்னு கெடக்கு ஒரு பொருள் தரையில.

தொட்டுப் பாத்தா;

தோலு.

எடுத்துப் பாத்தா;

ஆட்டுத்தோலு.

மோந்து பாத்தா;



விளக்கவிட்டு வெளிய குதிச்சு வாயிலயும் வயித்துலயும் அடிச்சுத் துடிச்சுத் துடிச்சு பூலித்தேவா!

உசுர் கிழியக் கத்துனவ தோல் மேல மயக்கம் போட்டு விழுந்துட்டா மல்லாக்கா.

எரியுது திரியில இருந்த தீபக் கொழுந்து.

குய்யோ முறையோன்னு ஊரே கூடி நிக்குது கட்டையன் வீட்டு வாசல்ல.

தகவல் தெரிஞ்சு மொதலகம்பட்டி ஆளுக வேற சாமியாடி வந்துட்டாக சண்டபுடிக்க.

பொறுமையா இருங்கப்பான்னு சொல்லிப்பாக்குது ஊள்ளூர்ப் பெருசுக.

பொறுமை என்னய்யா பொறுமை? இன்னைக்கி ஆட்டக் கடிச்சான்; நாளைக்கி மாட்டக் கடிச்சு மனுசனக் கடிப்பான். பாத்துக்கிட்டே பல்லாங் குழி ஆடச் சொல்றீகளா?

பதறாதீகப்பா. பஞ்சாயத்துல பேசிருக்கிருவோம்.

பஞ்சாயத்தென்னய்யா பஞ்சாயத்து? ஒலக்கையக் களவாண்டுபுட்டான்னு பிராது குடுத்தா, துரும்பு அபராதம்ன்னு தீர்ப்புச் சொல்ற பஞ்சாயத்து. விடுங்கய்யா, தகப்பனையும் மகனையும் சேத்துப் பாறைக் கறிபோட்டு காக்கா நீ தின்னு கழுகு நீ தின்னுன்னு பரசிவிட்டுப்போயிர்றோம் பரசி.

இம்புட்டுச் சலம்பல் நடக்குது. தகப்பனும் மகனும் வீட்டுக்குள்ள இருக்காங்களே தவிர வெளிய வந்த பாடக் காணம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-40

# உலக உணவு ஸ்தாபனமும் குடும்ப விவசாயமும்!





பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXVII

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

காலவோட்டத்துடன் சேர்ந்து உலக நடப்புகளும் அவ்வப்போது மாறிக்கொண்டேயிருக்கின்றன. இது காலத்தின்கட்டாயமுங்கூட. ஆனால விளைவு விபரீதமாகி விட்டால் என்னும் போது கொஞ்சம் நெருடலாகவே இருக்கின்றது. இது ஒன்றும் செய்திக்காக சொல்லப்பட்ட சேதியன்று. நன்றாக உன்னிப்பாக ஆராய்ந்து கொள்ளுங்கள். இந்தக் எச்சரிக்கைக் கூற்று வந்தது உலக உணவு ஸ்தாபனத்திலிருந்து ஆகும். உணவுற்பத்தி பற்றியும் உணவு பாதுகாப்பு பற்றியும் நிறைவாகவே தகவல்கள் பரிமாறப்பட்டுள்ளன. கால நிலை மாற்றம் அனைத்து நாடுகளையும் பாதிக்கத் தொடங்கியிருக்கின்றது. இதனை நாம் இப்போது உணரத்தலைப்பட்டிருக்கின்றோம். வெப்பத்தின் உயர்வைத் தாங்கமுடியாதிருக்கின்றது. இது வழக்கமாக நடைமுறையிலுள்ளதென்றாலும் இப்போதெல்லாம் எம்மால் இவற்றை தாங்கிக்கொள்ள முடியாதிருக்கின்றதல்லவா! வளிமண்டல வெப்பநிலையில் காணப்படும் உயர்வு கருத்தில் கொள்ள வேண்டியதொன்றாகும். இந்த உயர்ச்சி குறிப்பாக விவசாயம், காலநடை சுகாதாரம் போன்றவற்றில் கணிசமான மாற்றத்தை கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நோய்களின் அதிகரித்த தன்மையும் இவற்றுள் அடங்கும்.

**உலக உணவு ஸ்தாபனத்தில் பன்முகதகவல்கள்:**

உலக உணவு ஸ்தாபனத்தின் இணையத்தளம் (www.fao.org) மெருகூட்டப்பட்டிருக்கின்றது. எமது நாடு பற்றிய தகவல்கள் குறிப்பாக வளங்கள் அனைததினதும் தகவல்கள் வரைபடங்களுட்பட இணையத்தளத்தில் வெளியாகியிருக்கின்றன. இவை முக்கயமான தகவல்கள்! இதனை வைத்துக்கொண்டு எமது விவசாய உற்பத்திசார்ந்து திட்டமிடுவதற்கு வழி பிறந்திருக்கின்றது. பல்வேறு பட்ட தகவல்களை தொகுத்து தந்திருக்கினறார்கள். உண வுற்பத்தி, வளங்கள், தொழில் நுட்பங்கள், விலைத்தளம்பல்கள் என பலவகையான தகவல் களஞ்சியமாக இந்த இணையத்தளம் புதுப்பொலிவு பெற்றிருக்கின்றது. குறிப்பாக மாணவர்களுக்கு, கல்வியியலாளர்களுக்கு, திட்டமிடல் உத்தியோகத்தர்களுக்கு, விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கு இன்னும் ஆய்வாளர்களுக்கு என பலவகையான தகவல்கள் விலாவாரியாக தரப்பட்டிருப்பது சிறப்புக்குரியது.

2015 ஆம் ஆண்டினை **"உலக மண்ணுக்கான வருடமாக"** (International year of Soil - 2015) உலக உணவு ஸ்தாபனத்தால் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதன் முக்கியத்துவம் நிச்சயமாக உணரப்படவேண்டும். மண்ணினுடைய தேவையை அதன் சிறப்பியல்புகளை அனைவருக்கும் உணர்த்துவது முக்கியமானதாகும். இவ்வருட கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகள் என்பனவற்றில் மண்ணினுடைய முக்கியத்துவம் பற்றியும் அந்த வளத்தை பயன்படுத்துவதிலுள்ள இடர்கள் மற்றும் சிக்கல்கள் பற்றியும் பேசப்பட வேண்டும். மக்களுக்கு இவ்வழிகள் மூலமாக மண் பற்றிய செயதி சென்றடையவேண்டும். பல்வகைத்தன்மை பேணப்படுவதில் மண்ணும் முக்கிய




மாஏ பங்கு வகிக்கின்றது. மண்ணினை நாம் முறையாக முகாமைத்துவப்படுத்த வேண்டும். அவற்றிலொன்று பயிர்ச்செய்கையில் பல்வகைத்தன்மையினை உள்வாங்குதலாகும். தனிப்பயிராக பயிரிடாமல் கலப்பு பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் மண்ணின் வளத்தை பேணுவதோடு மண்ணினை பயிருற்பத்திக்கு முழுமையாக பயன்படுத்திக்கொள்ளலாம். மண் வளமானதாக செழிப்பானதாக இருக்க வேணடும். இயற்கை தந்த இந்த அரிய வளத்தை நாம் சரியாக பயன்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அதனால் இதுபற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்துவது சிறந்தது. அதுவும் மண்ணினை மையப்படுத்திய இவ்வருடத்தில் இந்த சிறப்பினை நாம் வெளிக்கொணரலாம்.

**குடும்ப விவசாயம்:**

உலக உணவு ஸ்தாபனத்தின் தரவுகளின் படி குடும்ப [illegible] போது உலகளாவிய ரீதியில் பெருகிவரும் சனத்தொகைக்கு உணவளிக்கக்கூடியதாயிருக்கின்றது. உலக உணவு ஸ்தாபன தகவலின்படி 90 சத வீதத்திற்கு அதிகமாக பண்ணைகள் தனிப்பட்ட ஒருவரினாலேயோ அல்லது விவசாய குடும்பத்திலுள்ள உறுப்பினராலேயோ பராமரிக்கப்படுகின்றன. 70-80 சதவீதமான விளைச்சல் குடும்ப விவசாய முறையினாலேயே உற்பத்திசெய்யப்படுகின்றன. உலகில் உற்பத்தியாகப்படும் உணவின் 80 சதவீதமானவை குடும்ப விவசாயத்தினாலேயே உற்பத்தியாக்கப்படுகின்றன. பல்வகைத்தனமையான பயிர்களை உற்பத்திசெய்வதன் மூலம் குடும்ப விவசாய மானது உணவு பாதுகாப்பிற்கு தனது முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றது. இந்த வகையில் பார்த்தால் எமது பிரதேசத்திலும் குடும்ப விவசாயத்தின் ஆதிக்கமே மேலோங்கியிருக்கின்றது. உலக தரவுகளின் படி குடும்ப விவசாயத்தில் சீனா 35 சதவீதமும், இந்தியா 24 சதவீதமும் ஏனைய ஆசிய நாடுகள் 15 சதவீதமும் மிகுதியான 27 சதவீதமானவை மற்றைய நாடுகளாகவும் இருக்கின்றன. இவற்றுள் 72 சதவீதமான குடும்ப விவசாயத்தின் விஸ்தீரணமாக ஒருஹெக்டயருக்கு குறைவானதாகவும் 6 சதவீதமானவை 5 ஹெக்டயருக்கு அதிகமானவையாகவும் மிகுதியான 22 சதவீதமானவை மற்றைய அளவுகளைக் கொண்டிருப்பதாகவும் கணிக்கப் பட்டுளளன. இதில் குறிப்பிடத்தக்க விடயமென்னவெனில் 57 சதவீதமான குடும்ப விவசாய பரப்பின் அளவு 1.0 - 1.5 ஏக்கராகவும் 47 சதவீதமான இந்திய குடும்ப விவசாய பரப்பின் அளவு 1.0-1.5 ஏக்கராகவும் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந்த வகையில் பார்த்தால் எமது பிரதேசத்திலும் இதுபோன்ற அளவிலேயே எமது குடும்ப விவசாய பரப்பினளவும் அமைந்திருக்கின்றதனை காணலாம். மேலும் குடும்ப விவசாயத்தின் மூலமாக உள்ளூர் பொருளாதாரத்தை மேமபடுத்த முடியும் எனவும் இதன் மூலம் சமூகத்தை பாதுகாக்கும் சட்டதிட்டங்களை அமுல்படுத்த முடியும் எனவும் மேலும் சமூகத்தினுடைய நலனை மேம்படுத்த முடியும் எனவும் கருதப்படுகின்றது. விவசாயத்தைப் பொறுத்தவரையில் உலகளாவிய நீர்தேவையில் 70 சதவீதமானவை விவசாயத்திற்காகவே பயன்படுத்தப்படுகின்றது. மேலும் உயிர் பல்வகைத்தன்மையினை விவசாய செய்கையின் மூலமே பாதுகாக்கின்றதென்பதனையும் கண்டறிந்துள்ளனர். மேலும் சூழல்தொகுதியினுடைய சேவைகளானவை விவசாயத்தின் மூலமாகவே கிடைக்கின்றதென்பதனையும் கண்டறிந்துள்ளனர்.

எனவே விவசாய செய்கையினை மேற்குறிப்பிட்ட பயன்களைப் பெறும் வகையில் நாம் மாற்றியமைத்து எமது சூழல்தொகுதியினை வளப்படுத்தி உணவுற்பத்தியில் நாம் தன்னிறைவடைய முயற்சிக்க வேண்டும்.

குடும்ப விவசாயத்தின் தன்மை எமக்கு முழுமையாக பொருந்துவதனால் அதனது பயன்களையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். உலக உணவு ஸ்தாபனத்தினால் வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் எமக்கு பயனுள்ளதாக இருக்கின்றதென பதனை உணர்ந்து அவ ற்றை பயன்படுத்த முயற்சி செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருசமூகமும் பிறிதோர் சமூகத்தை அடிமைப்படுத்துவதை தவிர்க்க தேசிய ஒற்றுமைக்கான செயற்குழு அங்கீகாரம்

**எந்த ஒரு சமூகமும் பிறிதோர் சமூகத்தை அடிமைப்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்பதனை உறுதிப்படுத்தும் நோக்கில் தேசிய ஒற்றுமைக்கான செயற்குழு ஒன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய அமைச்சரவையில் பிரதமர் ரணிலவிக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பது குறித்து வெளியிடப்பட்டுள்ள குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,

நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் ஆகிய துறைகளின் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

அதே போன்று எந்த ஒரு சமூகமும் பிறிதோர் சமூகத்தை அடிமைப்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

இது போன்ற நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேசிய ஒற்றுமை தொடர்பான செயற்குழுவொன்றை அமைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. (இ-5)

### ஓராள் அரங்கத் திருவிழா இன்றும் நாளையும் நல்லூரில்

யாழ். மாநகர சபையும் செயற்றிறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் ஓராள் அரங்கத் திருவிழா இன்று 11 ஆம் திகதி சனிக்கிழமையும் நாளை 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் மாலை 6.30 மணிக்கு நல்லூர் பாணன் குளத்தடியிலுள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் திறந்த வெளி அரங்கில் இடம் பெறவுள்ளது. (இ-5)

# அதிகமானவர்கள் விரும்பாதவரை தலைவராக நியமிக்கக் கூடாதாம்!

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து மகிந்த கருத்து

அதிகமானவர்கள் விரும்பாத ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுக் கொண்ட ஒருவரே எதிர்க்க ட்சித் தலைவராக பதவி வகிக்க முடியும்.

இந்த நிலைமையை தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா புரிந்து கொண்டுள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்களே எதிர்க்கட்சித் தலைவரை நிர்ணயிக்க வேண்டும்.

நாடாளுமன்றின் கடந்த கால நடவடிக்கைகளின் அடிப்படையில் சபாநாயகர் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

காமினி திஸாநாயக்க, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் எதிர்க்க ட்சித் தலைவர் பதவியை கோரிய போது இந்த விடயம் குறித்து தீர்மானிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியிடம் அப்போதைய சபாநாயகர் பொறுப்பினை ஒப்படைத்தார்.

இரகசிய வாக்கெடுப்பு நடத்தி அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்டவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

கூடுதலானவர்களின் ஆதரவினைப் பெற்றுக்கொண்ட ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டிய பொறுப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரது கடமையாகும்.

அதிகமானவர்க்ள் விரும்பும் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக் கப்படுவார் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாரஹேன்பிட்டி அபய ராமயவில் வைத்து தெரிவித்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 | 40 | 30 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 90 | 90 | 80-90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 60 | 60 | 60 | 40 | 40 |
| தக்காளி | 40 | 50 | 50 | 50 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 60 | 40 | 40 |
| கோவா | 60 | 30 | 60 | 40 | 30 | 30 |
| கரட் | 180 | 140 | 100 | 120 | 120 | 100 |
| பூசணி | 50 | 30 | 40 | 40 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 60 | 40 | 40 | 30 |
| வாழைக்காய் | 60 | 60 | 70 | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 70 | 90 | 100 | 70 | 50 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 40 | 80 | 90-100 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 100 | 80 | 100-120 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 50 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 60 | 80 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 50 | 50 | 60 | 50 | 60 |
| லீக்ஸ் | 200 | 140 | 150 | 200 | 140 | 130 |
| பீற்றூட் | 60 | 50 | 80 | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 100 | 130 | 100 | 60-100 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 300 | 320 | 400-500 | 500 |
| போஞ்சி | 200 | 100 | 100 | 120 | 100 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 30 | 40 | 20 | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 30 | 100 | 80 | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-70 | 50 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 120 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 100 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 40 | — | 40 | 80 | 40 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 338

மிது மிதுலா




திலிப் குமார்





கமல் நந்தினி





பிரணவன் வேணு




லக்சி சுலக்சி




தினேஸ் குமார்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டமைப்பை உடைக்க முனைகிறாரா ரணில் விக்ரமசிங்க?

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள விரிசல், விரிவடைந்துவரும் போக்கை உணர முடிகிறது.

வடக்கிலிருந்து படையினரை விலக்கி, உயர் பாதுகாப்பு வலயத்துக்காக அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களில் அவற்றின் உண்மையான உரிமையாளர்களை குடியமர்த்தும் விவகாரத்தில் தொடங்கிய இந்த சர்ச்சை, இப்போது ஒருவரையொருவர் விமர்சிக்கும் மற்றும் ஒருவரையொருவர் புறக்கணிக்கும் நிலைக்கு சென்றுள்ளது.

இந்த விவகாரம் உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச அளவிலும் உன்னிப்பாக அவதானிக்கப்படும் விவகாரங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

ஏனென்றால், இந்த விரிசல் இலங்கைத்தீவில் எதிர்காலத்தல் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

ஊடகங்களை பொறுத்தவரையில் இந்த விவகாரத்தை சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் ரணில் விக்கிரமசிங்க என்ற இரண்டு தனி நபர்களுக்கு இடையிலான பிரச்சினையாக பார்ப்பதா அல்லது தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு இனங்களின் சிந்தனைகளுக்கு இடையிலான பிரச்சினையாக பார்ப்பதா அல்லது முதலமைச்சர் விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்ரமசிங்க என இரண்டு அரசியல் தலைமைத்துவங்களுக்கு இடையிலான பிரச்சினையாக பார்ப்பதா என்று குழம்பிப்போயுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன- ரணில் விக்கிரமசிங்க கூட்டரசாங்கம், தனது கவர்ச்சியை இழக்கத் தொடங்கியுள்ள தருணத்தில் இந்த விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அண்மைய யாழ்ப்பாண பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், அதனை தமிழ மக்கள் கருத்தில் எடுக்கவில்லை என்று யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தர நாயகம் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு அடிப்படைக் காரணம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் புறக்கணிக்கப்பட்டதே.

இதனை ஜேர்மனித் தூதுவருடனான சந்திப்பின்போது அவரே குறிப்பிட்டிருந்தார்.

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், பிரதமர் ரணில் விக்ரமசிங்க வடக்கில் பயணத்தை மேற்கொண்டு சந்திப்புகள், கலந்துரையாடல்களை நடத்துவது முக்கியமான விடயமாகவே இருந்தது.

இருந்தாலும், வடமாகாண சபையையும் அதன் முதலமைச்சரையும் புறக்கணித்துவிட்டு, பிரதமர் ரணில் விக்ரமசிங்க நடந்துகொண்டமையானது, அவரது கடந்த காலம் குறித்து தமிழ் மக்களை சந்தேக கண்ணுடன் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

ஒரு பக்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனேயே பேச்சு வைத்துக்கொள்வேன் என்று அவர் கூறிக்கொண்டு, வடமாகாண முதலமைச்சரை ஒதுக்கிவைத்தார.

இது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கான ரணில் விக்ரமசிங்கவின் சதித்திட்டமாக இருக்கலாம் என்ற பரவலான சந்தேகம் தோன்றியுள்ளது.

2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவை ஏற்படுத்துவதில் அப்போதைய ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் கணிசமான பங்கை வகித்திருந்தது.

அப்போது விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு தளபதியாக இருந்த விநாயகமூர்த்தி முரளிதரன், புலிகள் இயக்கத்திலிருந்து பிரிந்து சென்றதுடன், அவர்களின பெரும் படைப்பிரிவுகளையும் சிதைத்திருந்தார். இதன் விளைவு, விடுதலைப் புலிகளை முள்ளிவாய்க்கால்வரை துரத்திச் சென்றது. அப்போது, விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு அடைக்கலம் கொடுத்து காப்பாற்றியது ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமே.

பின் நாட்களில் சஜித் பிரேமதாச போன்ற ஐ.தே.க. தலைவர்கள் பலரும், தாமே விடுதலைப் புலிகள் இயக்கத்தை உடைத்து அதை பலவீனப்படுத்தியதாகவும் எனவே, போரின் வெற்றியில் தமக்கும் கணிசமான பங்கு இருப்பதாகவும் மேடைகளில் மார்தட்டியிருந்தனர்.

விநாயகமூர்த்தி முரளிதரன் விடயத்தில், ஐ.தே.க. நடந்துகொண்ட விதம்கூட, 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிகக விடுதலைப் புலிகள் வியூகம் வகுத்தமைக்கு ஒரு காரணம் என்பதை மறுக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவை ஒரு குள்ளநரி அரசியல்வாதியாக பார்த்த தமிழ் மக்கள், ரணில் விக்கிரம சிங்கவையும் அதேபோன்று பார்க்கும் நிலை இன்று ஏற்பட்டு வருகிறது.

அதற்கு அடிப்படைக் காரணம், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் அவர் ஏற்படுத்திக் கொண்டுள்ள முரண்பாடு.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை மறுத்து வந்தவர்களில் முன்னைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன முக்கியமான ஒருவர்.

அவரது வழியில் வந்துள்ள ரணில் விக்ரமசிங்கவும் தமிழ் மக்கள் விடயத்தில் தவறான அணுகுமுறையை கடைப்பிடிக்க முனைவதாக வடமாகாணசபையின் அமர்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதனை அவர் குறிப்பிட்டதற்குக் காரணம், வடக்கிலிருந்து படை முகாம்களை விலக்கிக் கொள்ளப் போவதில்லை என்ற் ரணில் விக்ரமசிங்க மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன ஆகியோரின் அறிவிப்புகளே.

இதனை சுட்டிக்காட்டிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை, தமிழ்நாட்டின் தந்தித் தொலைக்காட்சிக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க அளித்திருந்த பேட்டியில் பொய்யர் என்று கடுமையாக விமர்சித்திருந்தார்.

அத்துடன், தாம் வடமாகாண சபையுடன் எந்தத் தொடர்பையும் வைத்துக்கொள்ளப் போவதில்லை என்றும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திக்க மாட்டேன் என்றும் பகிரங்கமாகவே சபதமிட்டார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் வடக்கிலுள்ள பிரச்சினைகள் குறித்து பேச்சுக்களை வைத்துக் கொள்வேன் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதன் தொடர்ச்சியாக வடமாகாணத்துக்கான தனது மூன்று நாள் பயணத்தில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு உரிய அழைப்புக் கொடுக்காமல் புறக்கணித்திருந்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஒட்டுமொத்த வடமாகாண சபையும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நிகழ்வுகளை புறக்கணிக்க, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமச்சந்திரன், சரவணபவன் போன்றவர்கள் ஒரே மேடையில் பிரதமர் ரணிலுடன் அமர்ந்திருந்தனர்.



ஆனால், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் அந்த நிகழ்வுகளை புறக்கணித்திருந்தார்.

இது கூட்டமைப்புக்குள் ஒற்றுமை என்பது கேள்விக்குறியாகி வருகிறதோ என்ற சந்தேகத்தை மட்டும் தமிழ் மக்களுக்குள் எழுப்பவில்லை.

(தொடரும்)

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சில அரசியல்வாதிகளுக்கு முதுகெலும்பு கிடையாது!

## முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**எனது பதவி பறிபோனாலும் நான் உண்மையைச் சொல்வேன். சில அரசியல்வாதிகளுக்கு முதுகெலும்பு கிடையாது என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



வத்தளை பிரதேச சபையின் தலைவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் குறித்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படவிருந்தது. எனினும் இதுவரையில் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. இதற்கு என்னவாயிற்று என நான் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேள்வி எழுப்புகின்றேன்.

நாட்டின் சில அரசியல்வாதிகளுக்கு முதுகெலும்பு கிடையாது, அதிகார மோகம் கொண்டுள்ளனர். பின்னால் இருந்து முதுகில் குத்தும் செயற்பாடுகள் வழமையாகிவிட்டன.

கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்களை நாம் பார்த்துள்ளோம். சந்திரிகா ஆட்சி செய்த காலத்தில் மகிந்தவிற்கு எதிராக கோள் சொல்லி மகிந்தவிற்கு எதிராக செயற்பட்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராகவும் இவர்கள் செயற்படக் கூடும். எனது பதவி பறிபோனாலும் நான் உண்மையைச் சொல்வேன்.

தற்போதைய அரசாங்கம் பெரும் எண்ணிக்கையிலானவர்களை தொழில்களிலிருந்து வெளியேற்றியுள்ளது. எமது கட்சியினருக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன.

எங்கே எமது எதிர்க்கட்சி, இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# தேசிய அரசாங்கம் உருவாகிய பின்னரே வடமாகாணத்திற்கு விடுதலை கிடைத்தது

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்தின் உதயத்துடனேயே வடக்குமாகாணத்திற்கு விடுதலை கிடைத்துள்ளது. அதை மறந்து வடக்குமாகாண முதலமைச்சர் சர்வதேசத்திடம் வசை பாடிக்கொண்டிருக்கின்றார் என அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழ் மக்களை அங்கீகரித்து உரிமைகளை வழங்கியது நாம் என்பதை தமிழ் தலைமைகள் மறந்து விட வேண்டாம் எனவும் அரசு தெரிவிக்கிறது. வடக்கு மாகாணத்தினை கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுவதாக வடமாகாண முதலமைச்சர் ஐ.நா. பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ள நிலையில் அரசாங்கத்தின் கருத்தினை வினவிய போதே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவடைந்தவுடன் வடக்கு மாகாணம் விடுதலையடையாது கடநத ஐந்து ஆண்டுகளாக மக்கள் இராணுவத்தின் பிடியில் சிக்கிக் கிடந்தனர். வடக்கு மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டும் சொத்துக்கள் பறிக்கப்பட்டும் அம் மக்களை அடிமைகளாக நடத்தியமை தொடர்பில் தமிழ் தலைவர்களே கடந்த காலத்தில் குரல் எழுப்பி வந்தனர்.

இந்நிலையிலேயே கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுடன் வடக்கு விடுதலையடைந்தது. இம்முறைத் தேர்தலில் வடக்கு வாழ் தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவினை எமக்கு கொடுத்தமையும் எமது வெற்றிக்கு உதவியமையும் வடக்கு மக்களின் ஆதங்கத்தினை முழுமையாக விளங்கிக் கொள்ள முடிந்தது.

அதேபோல் எமது அரசாங்கம் உதயமான பின்னரே வடக்கில் இத்தனை ஆண்டுகளாக அபகரிப்பில் இருந்து தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு தமிழ் மக்களிடையே ஒப்படைக்கப்பட்டுள்ளது. இராணுவ முகாம்களில் இருந்து பொதுமக்களின் காணிகளை அவர்களிடமேயே ஒப்படைத்திருக்கின்றோம். அதுமட்டுமன்றி நிவாரணங்கள் அனைத்தும் தமிழ் பேசும் வடக்கு மக்களையும் உள்ளடக்கியே மேற்கொள்ளபட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முன்னாள் அமைச்சர் பசிலின் மனைவி புஸ்பாவின் வங்கிக் கணக்குகளைச் சோதனையிட உத்தரவு

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் மனைவியான புஸ்பா ராஜபக்ஷவின் நிதியம் தொடர்பான வங்கிக் கணக்குகளை சமர்ப்பிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு அரச வங்கிகள் மற்றும் ஒரு தனியார் வங்கிக்கு இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

மோசடி தவிர்ப்பு பொலிஸ் பிரிவின் விசாரணையின்படி, பொய்யான தகவல்களின் அடிப்படையில் புஸபா ராஜபக்ஷவின் நிதியத்துக்கு வங்கிக்கணக்கு ஒன்று பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. எனினும் இது உண்மையில் இலங்கை துறைமுக அதிகார சபையின் வங்கிக்கணக்காகும்.

புஸ்பா ராஜபக்ஷவின் அரசசார் பற்ற நிதியம் 2010ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது. (இ-5)

# பிரதி நீதி அமைச்சர் சுஜீவ மன்னிப்புக்கோர வேண்டும்

பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க பகிரங்க மன்னிப்பு கோர வேண்டுமென பிரபல கலைஞர் ஜக்சன் அந்தனி கோரியுள்ளார்.

பிரபல சிங்கள திரைப்பட நடிகையும், தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான மாலினி பொன்சேகாவை நாடாளுமன்றில் கடுமையாக திட்டியதாக சுஜீவ சேனசிங்க மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் பேருந்து தரிப்பிடமொன்றில் இவ்வாறு கூறினாலும் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும்.

எனினும் இலங்கையில் நாடாளுமன்றிலும் பெண்கள் இழிவுபடுத்தப்படுகின்றனர்.

நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதிகளை அதிகரிக்க வேண்டும் எனவும், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டுமெனவும் கோரும் ஆளும் கட்சி அமைச்சர்கள் எங்கே? அவர்கள் இதுபற்றி என்ன சொல்கின்றார்கள்.

சுஜீவ சேனசிங்க ஒட்டுமொத்த பெண்களிடமும் பகிரங்கமாக மன்னிப்பு கோர வேண்டும் என ஜக்சன் அந்தனி நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## நீரிழிவு நோய்

நீரிழிவு நோயைப் பற்றிப் புதிது புதிதா பல விதமான ஆராய்ச்சிகள் வந்து கொண்டே இருக்கிறது. அதைத் துல்லியமாக எப்படிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. அதை எப்படி பரிசோதனை செய்து பார்க்கிறது. இது சம்பந்தமாக தொடர்ந்து பல ஆராய்ச்சிகள் நடந்துகொண்டு இருக்கின்றது. அதில் அண்மைக்காலமாக ஒரு நவீன சோதனை முறை வந்திருக்கிறதாம். அதுதான் C Pep talied சோதனை என்று சொல்கிறார்கள். அதுபற்றிய தகவல்களை தெரிந்துகொண்டோமானால் எங்களுக்கும்கூட அது உபயோகமாக இருக்கும். நீரிழிவுநோய் உள்ளவர்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்கும்.

இன்சுலின் ரொம்ப குறைவாக சுரக்கின்றதனாலே உண்டாகின்ற இன்சுலின் பற்றாக்குறை செயற்றிறன் குறைந்த இன்சுலின் இதுதான் நீரிழவுநோய் வருவதற்கு முக்கிய காரணம் என்று சொல்கிறார்கள்.

தற்சமயம் பார்த்தீர்களானால் இந்த இன்சுலின் சுரக்கின்றதை நேரடியாக அளப்பதற்கு சோதனை அவ்வளவாக இல்லையாம்.

இயற்கையாக சுரக்கின்ற மொத்த இன்சுலின் அளவையும் சரிவர கணிக்க முடியாத நிலைமை இருக்கின்றதாம். இன்சுலின் சுரந்தவுடனேயே அதன் பெரும்பகுதி கல்லீரலால் உபயோகப்படுத்தப்பட்டு விடுகிறதாம். கல்லீரலுக்குள் சென்றதுபோக மீதியுள்ள இன்சுலின் சுமார் 15 நிமிடம்தான் தங்கியிருக்குமாம். இதற்குத் துல்லியமாக இன்சுலின் அளவு சோதனை செய்வது இயலாத காரியம்.

இப்ப நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு இன்சுலின் சுரக்கச் செய்கிற மாத்திரைகளைக் சிலபேர் எடுத்துக்கொள்கிறார்கள். அந்தச் சுரந்த இன்சுலின் மாத்திரைகளால் தூண்டப்பட்டு வந்ததா அல்லது இயற்கையாக சுரந்ததா? இதை எப்படிப் பாகுபடுத்தி அறிகிறது? அது ஒரு பெரிய பிரச்சினை.

இன்சுலின் ஊசி போடுறதுக்கல்ல. உடலில் இருக்கிற இன்சுலின் வெளியில இருந்த ஊசி மூலம் கொடுக்கப்பட்டதா? அல்லது இயற்கையாக சுரந்ததா? அல்லது இரண்டும் சேர்ந்ததா? என்பதை வேறுபடுத்திக் காண்பது என்பது ரொம்பவும் சிரமமாக இருக்கிறது. அதனால்தான் இன்சுலின் சுரப்பைத் துல்லியமாக நுணுக்கமாக அறிவதற்கு ஒரு மாற்றுவழி தேவைப்படுகிறது.

தற்சமயம் இதற்காகப் பெரிதும் பயன்படும் சோதனைதான் C Ped taied சோதனை என்று சொல்கிறார்கள். கணையத்தில் இருக்கிற Peta உயிரணுக்கள் ஓர் இன்சுலினைச் சுரக்கின்றன. இவை இன்சுலினைச் சுரக்கும்போது இன்சுலினோடு ஒரு பொருளையும் சேர்த்தே சுரக்கின்றன. இப்படி இன்சுலினோடு சேர்ந்து வெளிவரும் திரவம்தான் C Ped taied என்பது.

இந்த Peta உயிரணுக்கள் ஓர் இன்சுலினுக்கு ஒரு C Ped taied சரிக்குச் சரியான அளவில் இந்த இரண்டையும் சுரக்குதாம். எனவே இன்சுலின் வெளிப்படும்போது அதற்கு நிகரான அளவில் C Ped taied யும் சரிக்குச் சரியான அளவில் இந்த இரண்டையும் சுரக்குதாம். எனவே இன்சுலின் வெளிப்படும்போது அதற்கு நிகரான அளவில் C Ped taied யும் வெளிவருகிறது. இன்சுலினைப் போலவே C Ped taied உடனடியாக கல்லீரல்களுக்குள் போகவில்லை. அதற்கு மாறாக அது இரத்தத்தில் அதிக அளவு கலந்திருதாம். 30 நிமிடங்களுக்கு மேலாகக்கூட அது இரத்தத்தில் கலந்திருக்கும். அதனால்தான் இரத்தத்தில் இன்சுலின் அளவை அளப்பதைக் காட்டிலும் C Ped taied அளவை அளந்திடலாம் என்று முடிவெடுக்கிறார்கள்.

C Ped taied அளவை சரியாக நாங்கள் அளந்திட்டோம் என்றால் அதற்கு நிகரான அளவுக்குக் காணப்படுகின்ற இன்சுலின் அளவை மறைமுகமாக நாங்கள் அறிந்துகொள்ள முடியுமாம். ஆகவே இன்சுலின் அளவை அறிவதற்கு C Ped tied அளக்கிறது தற்சமயம் வழக்கத்தில் இருக்கிறது என்று ஒரு மருத்துவக் குறிப்பு சொல்கிறது.

இந்த C Ped taied அளவை அளக்கிறதற்கு எலீசா முறை, ECL முறை என்று பலமுறைகள் இருக்கின்றதாம். நீரிழிவு நோய் உள்ள ஒருத்தருக்கு இன்சுலின் சுரப்பே இல்லாத நிலையா? முதல்வகை நீரிழிவு நோயா? அல்லது இன்சுலின் சுரப்பு இருந்தும் இன்சுலின் எதிர்ப்புத்தன்மை அதிகம் உள்ள நிலையா? அதாவது இரண்டாவது வகை நீரிழிவு நோயா? இதுமாதிரி இன்னும் பல நுணுக்கமான விடயங்களை இந்தச் சோதனை மூலமாகத் தெரிந்துக் கலாமாம்.

அதனால் நீரிழிவு நோயைப் பற்றி திறமையுள்ள அனுபவமுள்ள மருத்துவரிடம் இதைப்பற்றி கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். பயனடையலாம். என்னதான் சோதனை முறைகள் இருந்தாலும் எங்களுக்கென்று ஒரு சுய சிந்தனை இருக்க வேண்டுமல்லவா?

ஒருத்தர் டாக்டரிடம் போனார். டாக்டர் சொன்னார், உங்களுக்கு நீரிழிவு நோய் வந்துவிட்டது. அதனால் நீங்கள் தினமும் 5 கி.மீ. தூரம் நடக்க வேண்டுமென்று. பத்தாவது நாள் போன் பண்ணுங்கள் என்றாராம். அப்படி நடைப்பயிற்சி செய்த பத்தாவது நாள் அவர் போன் பண்ணினார். டாக்டர் நீங்கள் சொன்ன மாதிரி தினமும் 5 கி.மீ.தூரம் நடந்து இப்ப நான் 50 ஆவது கி.மீ.தூரத்தில் நிற்கிறேன். மேற்கொண்டு என்ன செய்யவேண்டும்?

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாதியற்ற தமிழன்!

திருப்பதி காட்டில் செம்மரங்களை வெட்டுவதற்கு முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 20 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலையை மோதல் சாவு என வழக்கம்போல திசை திருப்ப ஆந்திர காவல் துறை முயற்சி செய்கிறது. படுகொலையை நியாயப்படுத்தி செய்தியாளர்கள் கூட்டத்தில் ஆந்திர காவல் துறைத் தலைவர் பேசியபோது குறுக்குக் கேள்விகளை எழுப்பிய செய்தியாளர்கள் மீது எரிந்து விழுந்திருக்கிறார்.

அதிரடிப்படையின் மீது தாக்குதலில் ஈடுபட்டதால்தான் தமிழகத் தொழிலாளிகளைச் சுட்டுக் கொன்றதாகவும் இது முடிபு அல்ல ஆரம்பம் என ஆந்திர மாநில வனத்துறை அமைச்சர் கோபாலகிருஷ்ண ரெட்டி செய்தியாளர்களிடம் ஈவு இரக்கம் இல்லாமூல் கூறியிருக்கிறார். ஆனால், கொல்லப்பட்டவர்களின் உடல்களை பிணப் பரிசோதனை செய்தபோது அவர்கள் மிக அருகில் இருந்து சுடப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை வெளிப்பட்டுள்ளது.

அப்படியானால் அவர்கள் கட்டி வைத்துச் சுடப்பட்டிருக்கிறார்கள் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. தப்பி ஓடும்போது சுடப்பட்டிருந்தால் முதுகு, கால் அல்லது பின்புறங்களில் குண்டடிப்பட்டிருக்கும். ஆனால், அத்தனை பேரும் மார்பில் குண்டடிப்பட்டு இறந்திருக்கிறார்கள்.

இறந்து போனவர்களில் முனுசாமி உள்பட 8 பேர் திருப்பதியில் இருந்து திருத்தணிக்கு பேருந்தில் வந்துகொண்டிருந்தபோது, அதை நிறுத்தி வாகன சோதனையில் ஈடுபட்ட ஆந்திர காவலர்கள் இந்த 8 பேரையும் சந்தேகத்தின் பேரில் கீழே இறக்கி விசாரித்தபோது அவர்களிடமிருந்து தப்பிய சேகர் என்பவர் சொந்த ஊருக்கு வந்து விவரத்தைக் கூறியபோதுதான் உண்மை வெளிவந்தது.

இந்த ஏழு பேரையும் காவல் துறை கைதுசெய்து காட்டிற்குள் கொண்டு போய் சுட்டுக் கொன்றிருக்கிறது. கொலை செய்யப்படுவதற்கு முன்பாக இவர்கள் கடுமையாகச் சித்திரவதைச் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை இவர்களின் உடல்களில் உள்ள வெட்டுக் காயங்கள் அம்பலப்படுத்தியுள்ளன.

2011 ஆம் ஆண்டு முதல் தமிழகத் தொழிலாளிகள் இந்த வனப் பகுதியில் தொடர்ந்து சுட்டுக்கொல்லப்பட்டு வருகிறார்கள். சுமார் 2,000 தமிழர்கள் மரக் கடத்தல்காரர்கள் என முத்திரைக் குத்தப்பட்டு நெல்லூர், சித்தூர், கடப்பா மாவட்டங்களில் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோர் ரயில் நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலிருந்து காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்கள். இவர்கள் மீது கொலை வழக்கு உள்பட பல கொடுமையான சட்டங்களின் கீழ் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி, சேலம், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, சித்தேரி மலை, சேர்வராயன் மலை, கல்வராயன் மலை ஆகிய பகுதிகளில் வாழும் பழங்குடியினரைக் குறிவைத்து ஆசைகாட்டி சமூக விரோத கும்பல் அவர்களை அணுகி கூலித் தொழிலாளிகளாக மரம் வெட்டுத் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளது.

இந்த மக்களுக்கு முன்கடன் கொடுப்பதுடன், குறிப்பிட்ட அளவு மரத்தை வெட்டுவதற்கேற்ற கூலி கொடுக்கப்படும், கை நிறைய பணத்துடன் வீடு திரும்பலாம் என ஆசை காட்டி அழைத்துச் செல்கிறது இக்கும்பல்.

செம்மரங்களைக் கடத்தி சென்னைத் துறைமுகத்திற்குக் கொண்டு வந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கோடி கோடியாகப் பணம் புரட்டும் கும்பலின் தலைவர்கள் யார். அவர்களுக்குப் பின்னணியில் இருந்து உதவும் அரசியல்வாதிகள் யார் என்பதெல்லாம் காவல் துறைக்குத் தெரியாமல் இருக்க முடியாது.

இந்தக் கும்பலையும் அதனுடைய தலைவர்களையும் கைது செய்யாமல் கூலிக்கு மரம் வெட்டுபவர்களைக் கொன்று குவிப்பதன் மூலம் உண்மைகளை மறைக்க முயற்சி நடக்கிறது. தமிழர்கள் நாதியற்றவர்கள் என்பதால் அவர்கள் படுகொலைகளுக்கு ஆளாகிறார்கள்.

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் சிறுவர்களையும், சிறுமியர்களையும் கடத்திச் சென்று பிற மாநிலங்களில் விற்பனை செய்யும் கும்பலைச் சேர்ந்த சிலர் பிடிபட்டிருக்கிறார்கள். 20 ஆண்டு காலமாக இவர்கள் இந்தக் கொடுமையான தொழிலைச் செய்து வந்திருக்கிறார்கள் என்ற உண்மையும் அண்மையில் வெளிப்பட்டிருக்கிறது. கடத்தப்படும் சிறுவர்கள் திருட்டுத் தொழிலிலும் சிறுமிகள் விபசாரத் தொழிலிலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

**உன் கண்ணில் நீர் வழிந்தால் -**
**என்னெஞ்சில் உதிரம் கொட்டுதடி**

- என பாரதி நெஞ்சம் நெகிழப் பாடினான்.

10 மாதம் சுமந்து எவ்வளவோ துன்பங்களுக்கிடையே குழந்தைகளைப் பெற்று கண்ணுக்குக் கண்ணாக வளர்த்த எத்தனை ஆயிரம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைப் பறிகொடுத்தபோது எப்படித் துடிதுடித்திருப்பார்கள்? அதே ஏக்கத்திலேயே பலர் மாண்டிருப்பார்கள்.

ஆனால், இதற்குக் காரணமான கொடியவர்கள் 20 ஆண்டு காலமாக இந்தக் குழந்தைகளைக் கடத்தும் தொழிலைத் தங்கு தடையின்றி செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்குப் பின்னணியில் இருந்த அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் அச்சமின்றி இன்னமும் நாட்டில் நடமாடுகிறார்கள்.

ஆசியாவிலேயே மிகப்பெரிய சேரி மும்பையில் உள்ள தாராவி சேரிதான். இங்குதான் இலட்சக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் சாக்கடையோரங்களில் பொத்தல் குடிசைகளில் வாழ்கின்றனர். தமிழகத்தில் வாழ வழியின்றி பிழைப்புத் தேடி மும்பை சென்று கிடைத்த [illegible] அரைவயிற்றுக் கஞ்சி [illegible] அவர்கள்.

ஆமதாபாத் நகரில் தானிய மண்டிகளில் லாரிகளிலிருந்து மூட்டைகளை முதுகில் சுமந்து மண்டிகளுக்குச் சென்று அடுக்குவது, மண்டிகளில் இருந்து லாரிகளுக்கு மூட்டைகளைக் கொண்டுவரும் தொழில் செய்பவர்களை நான் நேரில் பார்த்தபோது திடுக்கிட்டுப் போனேன். காரணம் சுமக்க முடியாத மூட்டைகளை தங்கள் முதுகில் சுமப்பவர்கள் தாய்மார்கள். அதிலும் தமிழச்சிகள்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழகத்திலிருந்து இலட்சக்கணக்கான தமிழர்கள் ஆசை வார்த்தைகளுக்கு இரையாகி இலங்கை, மியான்மர், மலேசியா, தென்னாப்பிரிக்கா மற்றும் பல தீவுகளுக்கு தோட்ட வேலைகளுக்காக மந்தை மந்தையாக ஓட்டிச் செல்லப்பட்டனர்.

ஆங்கிலேயர் தமது குடியேற்ற நாடுகளில் இரப்பர், தேயிலை, காபி போன்ற பணப் பயிர் தோட்டங்களை அமைப்பதற்காக தமிழர்களை அழைத்துச் சென்றனர். ஆனால், அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டு சக்கையாக அவர்கள் வீசியெறியப்பட்டார்கள்.

இலங்கையில் இரப்பர், தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி அந்நாட்டின் தேசிய வருமானத்தில் 60 சதவீதத்தை தங்கள் உழைப்பினால் அள்ளித்தந்த தமிழர்களின் குடியுரிமையும் வாழ்வுரிமையும் பறிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 5 இலட்சத்திற்கும் மேற்பட்டத் தமிழர்கள் இந்தியாவிற்கு விரட்டியடிக்கப்பட்டார்கள். ஏனென்றால், தமிழர்கள் நாதியற்றவர்கள்.

மியான்மரில் மிகச்செழிப்பான பகுதியாக இன்று விளங்கும் ஐராவதி சமவெளிப் பகுதி சதுப்பு நிலமாக புல்லும் புதரும் மண்டிக் கிடந்தது. அப்பகுதியை வெட்டித் திருத்த 10 இலட்சத்திற்கு மேற்பட்டத் தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து ஆங்கிலேயர் களால் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அவர்களுடைய உழைப்பினால் ஐராவதி சமவெளிப் பகுதி உலகில் அதிக நெல் விளைச்சல் உள்ள நிலமாக மாறியது. ஆனால், இதற்காக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டத் தமிழர்கள் தங்கள் உயிர்களை இழந்தார்கள்.

இராசேந்திர சோழன் காலத்தில் மலேசியாவில் உள்ள கடாரம் என்ற பகுதியை அவன் கைப்பற்றினான் என வரலாறு கூறுகிறது. ஆனால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் அதே இராசேந்திர சோழனின் வழிவந்த தமிழர்கள் அந்நாட்டிற்கு தோட்டத் தொழிலாளர்களாக கப்பல் கப்பலாக ஏற்றிச் செல்லப்பட்டார்கள். இரப்பர், தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி மலேசியாவை வளம் கொழிக்கச் செய்தார்கள்.

ஆனால், 2 ஆம் உலகப் போரின்போது அந்நாட்டைக் கைப்பற்றிய ஜப்பானியர் அங்கிருந்து பர்மா வரை மலைக் காடுகளின் வழியே ரயில் பாதை அமைக்கத் திட்டமிட்டபோது ஆயிரக் கணக்கான மலேசியத் தமிழர்களைக் கைதிகளாக்கி ரயில் பாதையை அமைக்கும் கொடுமையான பணியில் ஈடுபடுத்தினார்கள்.

காட்டு மிருகங்களுக்கும் மலைப் பாம்புகளுக்கும், மலேரியா காய்ச்சலுக்கும் இரையாகி ஆயிரக்கணக்கான தமிழர்கள் மாண்டார்கள். எனவே, இப்பாதை **மரண ரயில் பாதை** என் வரலாற்றில் குறிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் இலங்கையில் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டத் தமிழர்கள் சிங்கள இராணுவ வெறியர்களால் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்யப்பட்டபோது. அதைத் தடுத்து அவர்களைக் காப்பாற்ற இந்தியா உள்பட உலகில் எந்த நாடும் முன்வரவில்லை. தமிழ்நாட்டுத் தமிழர்கள் நெட்டை மரங்களைப் போல நின்று பெட்டைப் புலம்பல் புலம்பினோம்.

**ஆப்பிரிக்கத்துக் காப்பிரி நாட்டிலும்**
**தென்முனை யடுத்த**
**தீவுகள் பலவினும்**
**பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள**
**பற்பல தீவினும் பரவி யிவ்வெளிய**
**தமிழச் சாதி, தடியுதை யுண்டும்**
**காலுதை யுண்டும் கயிற்றடியுண்டும்**
**வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடுஞ்**
**செய்தியும்**
**பெண்டிரை மிலேச்சர்**
**பிரித்திடல் பொறாது**
**செத்திடுஞ் செய்தியும்**
**பசியாற் சாதலும்**
**பிணிகளாற் சாதலும்**
**பெருந்தொலை யுள்ளதம்**
**நாட்டினைப் பிரிந்த**
**நலிவினாற் சாதலும்**
**இஃதெலாம் கேட்டு என துளம்**
**அழிந்திலேன்**

என பாரதிப் புலவன் கிட்டத்தட்ட நூறாண்டுகளுக்கு முன்பு பாடினான்.


அயல்நாடுகளுக்கு பிழைக்கப் போன தமிழர்களுக்கு நேரிட்ட துன்பங்களைக் குறித்து மனம் பொறாது பாடினான். ஆனால் இன்று இந்திய நாட்டிலேயே தமிழர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் குறித்து மனம் நொந்து பாடுவதற்கு பாரதி இல்லை.

**-பழ.நெடுமாறன்-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் சடலங்களுடன் மக்கள் மறியல்



ஆந்திர பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் சிதைக்கப்பட்டுள்ளதால் மறு பிரேதப் பரிசோதனை செய்யக் கோரி உறவினர்களும் கிராம மக்களும் நேற்று முன்தினம் சடலங்களுடன் மறியலில் ஈடுபட்டனர். கடைகளையும் அடைத்து போராட்டத்தில் ஈடுபட்டதால் திருவண்ணாமலை அருகே பதற்றம் ஏற்பட்டது.

திருப்பதி அருகே சேஷாசலம் வனப்பகுதியில் கடந்த 7 ஆம் திகதி காலை தமிழக கூலித் தொழிலாளர்கள் 20 பேரை, செம்மரம் வெட்டிக் கடத்த முயன்றதாகக் கூறி ஆந்திர மாநில பொலிஸார் சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவம், தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் பலியானவர்களில் 12 பேர் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். 7 பேர் தருமபுரி மாவட்டத்தையும் ஒருவர் சேலம் மாவட்டம் ஆத்தூரையும் சேர்ந்தவர் என தெரியவந்தது. பலியான 20 பேரின் உடல்களும் திருப்பதி ருய்யா அரசு வைத்தியசாலையில் கடந்த புதன் கிழமை தமிழக அதிகாரிகள் முன்னிலையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. பின்னர், அரசு செலவிலேயே அந்த உடல்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலை மேல்குப்சானூர் கிராமத்தைச் சேர்ந்த பன்னீர் செல்வம், வெள்ளிமுத்து, சின்னசாமி, கோவிந்தசாமி, ராஜேந்திரன் ஆகிய 5 பேரின் உடல்கள் நேற்று முன்தினம் அதிகாலை பொலிஸ் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டன. உடல்களைப் பார்த்து உறவினர்கள் கதறி அழுதனர். பின்னர் இறுதிச் சடங்குகள் நடத்தி, உடல்களை அடக்கம் செய்துள்ளனர். (இ-5)

# லக்வியை விடுதலைசெய்ய உயர்நீதிமன்றம் உத்தரவு!

## இந்தியா கடும் கண்டனம்

**மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்குக் காரணமான ஜகியுர் ரெஹ்மான் லக்வியை சிறையிலடைக்கும் அரசு உத்தரவுக்கு, லாகூர் உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடைக்காலத் தடை விதித்ததோடு அவரை விடுதலை செய்யவும் உத்தரவிட்டது. இதேவேளை இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.**



லக்வியை பொது அமைதிக் காப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைப்பதற்கான பஞ்சாப் மாகாண அரசின் உத்தரவை நியாயப்படுத்தும் முக்கிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனக் கூறி, நீதிபதி முகமது அன்வருல் ஹக் அந்த உத்தரவுக்கு இடைக் காலத் தடை விதித்தார்.

லக்வியை சிறையிலடைப்பதற்குப் போதுமான ஆதாரங்களை சட்டத்துறை அதிகாரி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

எனினும், அந்த ஆதாரங்கள் வலுவாக இல்லை எனக் கூறி நீதிபதி ஏற்க மறுத்துவிட்டார் என்றனர் அவர்கள்.

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு லஷ்கர்-இ-தொய்பா பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் 166 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கான சதி வேலையில் ஈடுபட்டதாக பாகிஸ்தானைச் சேர்ந்த ஜகியுர் ரெஹ்மான் லக்வி, அப்துல் வாஜித், மஸார் இக்பால், ஹமத் அமீன் சாதிக், சாகித் ஜமீல் ரியாஸ், ஜமீல் அகமது, யூனிஸ் அஞ்ஜும் ஆகிய 7 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு பாகிஸ்தான் சிறப்பு நீதிமன்றத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், லக்விக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் பிணை வழங்கியதைத் தொடர்ந்து, அவரை பொது அமைதிக் காப்புச் சட்டத்தின் கீழ் பாகிஸ்தான் அரசு மீண்டும் சிறையிலடைத்தது. எனினும், அந்தச் சட்டத்தின் கீழ் அவரை சிறையிலடைத்தது செல்லாது என மற்றொரு நீதிமன்றம் கூறியதையடுத்து, வேறு புதிய வழக்கைப் பதிவு செய்து பாகிஸ்தான் அரசு மீண்டும் அவரைக் கைது செய்தது.

இவ்வாறு பலமுறை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டும், பொது அமைதிக் காப்புச் சட்டத்தின்கீழ் லக்வியை அரசு மீண்டும் சிறையிலடைத்து வந்த நிலையில், தற்போது மறுபடியும் அரசின் கைது உத்தரவுக்கு நீதிமன்றம் இடைக் காலத் தடை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, பயங்கரவாதி லக்வியை விடுவிக்குமாறு பாகிஸ்தான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு, மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, மத்திய உள்துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர், தில்லியில் கூறியதாவது.

நீதிமன்றத்தின் இந்த உத்தரவு மிகுந்த ஏமாற்றம் தருகிறது. லக்வியைப் போன்ற பயங்கரவாதிகள், சிறையிலிருந்து வெளியே வருவதைத் தடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் எடுக்க வேண்டும்.

மும்பைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதை பாகிஸ்தான் உறுதிப்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து மும்பை பயங்கரவாதத் தாக்குதல் வழக்கில் ஆஜராகி வரும் இந்திய அரசின் சட்டத்தரணி உஜ்வல் நிகம் கூறுகையில்,

இந்த வழக்கில் போதுமான ஆதாரங்களை சமர்ப்பிக்க பாகிஸ்தான் அரசு தவறிவிட்டதாக லாகூர் உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் என அந்நாட்டு அரசு கூறுவதற்கும், அதன் செயலுக்கும் இடையே பெரிய முரண்பாடுகள் இருப்பதை இது காட்டுகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரதமருக்கு எதிராக கனடாவில் மனிதவுரிமை மீறல் முறைப்பாடு

குஜராத் மாநிலத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு நிகழ்ந்த கலவரம் தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீது குற்ற வழக்கு பதிவு செய்யுமாறு, கனடா நாட்டு சட்ட அமைச்சரும், தலைமை சட்டத்தரணியுமான பீட்டர் மாகே விடம், அந்த நாட்டில் வாழும் நீதிக்கான சீக்கியர்கள் (எஸ்எஃப்ஜே) என்ற அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

பிரதமர் மோடி, அடுத்த வாரம் கனடா செல்லவுள்ள நிலையில் இந்த முறைப்பாட்டு மனு அளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது.

நரேந்திர மோடி கடந்த 2002 ஆம் ஆண்டு குஜராத் முதலமைச்சராக இருந்தபோது நிகழ்ந்த கலவரத்தில், முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறை பரவுவதற்கு உதவி புரிந்தார்.

எனவே மோடி மீது மனிதவுரிமை மீறல் குற்ற வழக்கு தொடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிக்கான சீக்கியர்கள் அமைப்பு கடந்த ஆண்டு மோடி அமெரிக்கா சென்றிருந்தபோது, அந்த நாட்டு நீதிமன்றத்தில் குஜராத் கலவரம் தொடர்பாக அவர் மீது வழக்குத் தொடுத்தது.

ஒரு நாட்டின் தலைமைப் பதவியில் ஒருவர் இருக்கும்போது, அவர் மீது, அமெரிக்கச் சட்டத்தின்படி மனிதவுரிமை மீறல் வழக்குத் தொடுக்க இயலாது.

மேலும், இந்தியப் பிரதமர் மீது மனித உரிமை வழக்கு தொடுக்க இயலாதவாறு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அவருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க அரசு அந்த நாட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கூறியது. அதனையடுத்து, அந்த வழக்கு நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனால், மனிதவுரிமை மீறல் குற்ற வழக்கில், ஒரு தேசத்தின் தலைவருக்கு அமெரிக்க, இந்திய சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு, கனடா நாட்டு சட்டத்தில் வழங்கப்படவில்லை என்று காரணம் கூறி, மோடி மீது வழக்கு தொடுக்கவேண்டும் என்று நீதிக்கான சீக்கியர்கள் அமைப்பு (எஸ்எஃப்ஜே), கனடா நாட்டு சட்ட அமைச்சரும், தலைமை சட்டத்தரணியுமான பீட்டர் மாகேவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5)




# 20 தமிழர்களை திட்டமிட்டே கொலை செய்தனர்

## தமிழ்ப் பேராசிரியர் பணியை தூக்கியெறிந்தார்

ஆந்திராவில் 20 தமிழர்களை சுட்டுக் கொன்றதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ் பேராசிரியர் ஒருவர் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் நடத்தி வரும் கல்லூரியில் இருந்து பணியை இராஜினாமா செய்துள்ளார்.

ஆந்திராவில் செம்மரம் கடத்த முயன்றதாக கூறி 20 தமிழர்களை கடந்த 7 ஆம் திகதி சிறப்பு அதிரடிப் படை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

தமிழகம் மற்றும் ஆந்திராவில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய இந்த சம்பவத்தை கண்டித்து தமிழகத்தில் பல்வேறு இடங்களில் அரசியல் கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இந்த சம்பவத்தை கண்டித்து ஸ்ரீ பெரும்புதூரில் உள்ள ஆந்திராவைச் சேர்ந்தவர்கள் நடத்தி வரும் பொறியியல் கல்லூரியில் பணிபுரிந்து வந்த தமிழகத்தை சேர்ந்த பேராசிரியர் அருண்குமார் (27) தனது பணியை இராஜினாமா செய்துள்ளார். திருவண்ணாமலை போளூரை சேர்ந்த இவர் திருமணமாகி சென்னை வளசரவாக்கத்தில் வசித்து வருகிறார்.

மேலும், ஆந்திராவில் தமிழர்கள் திட்டமிட்டே சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று கூறி தனது பணியை இராஜினாமா செய்துள்ளார் எனத் தெரியவருகிறது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்க்கால் மூடப்படவில்லை

## சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்




(மல்லாவி)

வெள்ள நீர் வழிந்தோடுவதற்காக வெட்டப்பட்ட வாய்க்கால் மூடப்படாமையால் அதைக் கடந்து வங்கிக் கடைகள், கோவில் ஆகியவற்றிற்கு செல்லும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த வருடம் மாங்குளத்தில் இருந்து மல்லாவி ஊடாக வெள்ளாங்குளம் செல்லும் பிரதான வீதி செப்பனிடப்பட்டது.

இதன்போது குறித்த வீதிக்கு அருகாமையில் வெள்ள நீர் வழிந்தோடுவதற்காக வாய்க்கால் வெட்டப்பட்டது.

இந்த வீதி புனரமைப்பு வேலைகள் முடிவடைந்த பின்னர் வெள்ள நீரை வெளியேற்றுவதற்காக வெட்டப்பட்ட வாய்க்கால் சில இடங்களில் அரைகுறையாக மூடப்பட்டும் மல்லாவி தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக வெட்டப்பட்ட வாய்க்கால் மூடப்படாமலும் காணப்படுகின்றது.

வங்கிக்கு வருகைதரும் வாடிக்கையாளர்கள், கடைகள் மற்றும் கோவிலுக்கு செல்வோர் குறித்த வாய்க்காலைக் கடந்தே செல்ல வேண்டியுள்ளது.

இதனால் பல்வேறு சிரமங்களைக் எதிர்கொள்வதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே குறித்த வீதி முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியாக காணப்படுவதால் காலம் தாழ்த்தாது போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வாய்க்காலை செப்பனிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2)

# சாமஸ்ரீ தேசிய விருது விழா

(வவுனியா)

தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்தும் முகமாக இருபது வருட காலமாக நாம் செய்து வரும் சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சமய, சமூக, கலை, கலாசார ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்திஜீவிகள், வர்த்தகர்கள் ஆகியோருக்கான சாமஸ்ரீ தேசிய விருது விழா எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன், விசேட விருந்தினராக சமூர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அல் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம், முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எல்.என்.மைமுனா அஹமட் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

# சமுர்த்தி பயனாளிகள் வங்கியில் சிரமதானப்பணி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி வளாகம் சமுர்த்தி பயனாளிகளால் சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் கண்ணகைபுரம் (கேஎன்-3)கிராம வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தரின் தலைமையில் சமுர்த்தி பயனாளிகளால் நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் வங்கியின் வளாகம் முழுமையாக துப்புரவு செய்யப்பட்டது. இச்சிரமதான பணியில் சுமார் 80 இற்கு மேற்பட்ட சமுர்த்தி பயனாளிகள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (2-272)

# கிராமங்களின் வேலைத்திட்டங்களின் தீர்மானம் திணைக்களங்களின் அனுமதிக்கு அனுப்பிவைப்பு

(கண்டாவளை)

புதிய அரசின் 100நாட்கள் துரித வேலைத்திட்டத்தின்கீழ் ஒரு கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு கண்டாவளை பிரதேச பிரிவிற்குட்பட்ட 16 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஒவ்வொரு கிராமத்திற்குமான நிலையான அபிவிருத்தித்திட்டம் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான அனுமதிக்கு உரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானங்கள் கிராம மட்ட பிரதிநிதிகள், கிராமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் பிரமுகர்கள், திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோர் ஒன்றிணைந்தே வேலைத்திட்டங்களுக்கான தீர்மானத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பான இறுதித்தீர்மானத்தை மேற்கொள்ளும் நிகழ்வு அண்மையில் கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் கண்டாவளை பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலக உதவித் திட்டப் பணிப்பாளர், கண்டாவளை பிரதேச கோட்டக்கல்வி அதிகாரி, பொது சுகாதார வைத்திய பரிசோதகர், வீதி அபிவிருத்தி திணைக்கள மற்றும் நீர்ப்பாசன அதிகாரிகள், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டனர்.

இதன்போது நெல் உலர விடும் தளம், பொதுமண்டபம் அமைத்தல், நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு ஆகிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது. (2-263)





முல்லைத்தீவு மாவட்டத்தின் இரண்டாவது இளைஞர் மத்திய நிலையமான வள்ளுவர் புரம் இளைஞர் மத்திய நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட போது...

(படங்கள்:-பனிக்கன்குள செய்தியாளர்)




# கிளிநொச்சி நகரில் நடைபாதை வியாபாரத்திற்கு முற்றாகத் தடை

## மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி நகரில் நடைபாதை வியாபாரத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் சித்திரைப் புத்தாண்டு முதல் இந்நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என்றும் மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வர்த்தக சங்க இணைப்பாளர் மு.தவராசா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகர வர்த்தக சங்கத்தினரும் கரைச்சி பிரதேச சபையினருக்கும் இடையில் கடந்த வாரம் நடைபாதை வியாபாரத்தை தடை செய்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி நகரில் நடைபாதை வியாபாரிகளால் பொது மக்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்ட பொருட்கள் கூடிய விலைக்கு விற்றல், போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வீதியில் பொருட்களை வைத்து விற்றல், தரமற்ற பொருட்களை தரமான பொருளின் விலைக்கு விற்றல் போன்ற கருத்துக்கள் கிளிநொச்சி வர்த்தகர்களினால் முன்வைக்கப்பட்டன்.

அத்துடன் இவ்வாறான செயற்பாடுகளினால் நிரந்தர வர்த்தகர்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்து மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (2-277)

# சதுரங்க சங்க பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தின்போது புதிய நிர்வாகத்தெரிவும் சங்கத்தின் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளதால் அனைத்து அங்கத்தவர்களையும் புதிதாக இணைய விரும்புவோரையும் சதுரங்க ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் தி.சிவரூபன் அறிவித்துள்ளார். (2-277)

# தமிழக உறவுகள் கொல்லப்பட்டமைக்கு நீதியான விசாரணை அவசியம் தேவை

## கண்டிக்கிறார் செல்வம் எம்.பி

இந்தியாவின் ஆந்திர வனப்பகுதியில் தமிழக உறவுகள் கொல்லப்பட்டமைக்கு நீதி தேவை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

ஈழத்தமிழர்கள் கொல்லப்படும் போதெல்லாம் இதயசுத்தியோடு எமக்கு ஆதரவாக குரல்கொடுத்த உறவுகள் தமிழகத்தவர்களே. இன்று அவர்களுக்கு இன்னல்கள் இடம்பெறுவது எம்மை வருத்தமடையச் செய்வதாகவுள்ளது.

தமிழர்களுக்கு எங்கும் அநீதிகளே இடம்பெற்றுவருகின்றன என்பது இவ்வாறான செயற்பாடுகள் மூலம் வெளிக்காட்டப்பட்டு வருகின்றது. ஆந்திராவுக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையிலான முரண்பாடான விடயங்கள் இன்று அப்பாவித் தமிழர்களை கொல்வதற்கு ஒரு காரணியாகவும் மாறியுள்ளது.

இவ்வாறான கண்மூடித்தனமான பொலிஸாரின் செயற்பாடுகள் இலங்கையில் மாத்திரமின்றி இந்தியாவிலும் அரங்கேறிவருவது கண்டனத்திற்கு உரியது என்பது மாத்திரமின்றி இது தொடர்பில் விசாரணை செய்து குறித்த பொலிஸாருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுக்கு எதிரான பிரேரணைக்கு ஜனாதிபதி இடமளியார்

# மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றி நாட்டைச் சீரழிக்க மகிந்த சூழ்ச்சி!

**(கொழும்பு)**

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதிக்க மாட்டார் எனவும் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றி நாட்டை சீரழிக்கப் பார்க்கிறார் எனவும் அமைச்சரும், ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தின் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதும் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதற்காக முயற்சிப்பதும் மகிந்த ராஜபக்ஷவின் சூழ்ச்சியே.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தெரிவித்துள்ள நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய அரசாங்கத்தை வீழ்த்தி மீண்டும் மகிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார யுகத்தினை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மகிந்தவின் விசுவாசக் கூட்டணியொன்று முயற்சி செய்து கொண்டிருக்கின்றது. அதன் காரணத்தினாலேயே ஐக்கிய தேசிய கட்சியின் மீது பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு எம்மை குற்றவாளிகளாக்க முயற்சிக்கின்றனர்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகள் மற்றும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அனைத்தும் மக்களுக்கு தெரிந்துள்ளது.

### அமைச்சர் கிரியெல்ல குற்றச்சாட்டு



அதேபோல் கடந்த பத்து ஆண்டுகளில் இவர்கள் ஆட்சி செய்ததன் காரணத்தினால்தான் இன்று எமது அரசாங்கம் அழுத்தங்களுக்கு முகங்கொடுத்து வருகிறது.

இவ்வாறான நிலையில் அரசாங்கத்தை கவிழ்க்க சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகிந்த ராஜபக்ஷவை பிரதானப்படுத்தி விமல், தினேஷ், வாசு குழுவினர் அரசாங்கத்திற்கு எதிராக பல சூழ்ச்சி வேலைகளை செய்து கொண்டிருக்கின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்து அரசாங்கத்தை கவிழ்க்கும் சதி திட்டத்தின் பின்னணியில் மகிந்தவே செயற்படுகின்றார். மீண்டும் அவர் அதிகாரத்தை கைப்பற்றி நாட்டை சீரழிக்கப் பார்க்கின்றார். ஆனால் அதற்கு ஒருபோதும் மக்கள் இடம் கொடுக்க மாட்டார்கள்.

அதேபோல் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி யார் பக்கம் நிற்பது என்பதில் இன்றும் குழப்பமாகவே உள்ளது.

மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதா? அல்லது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதா? என்ற குழப்பத்திற்கு முதலில் விடை தேட வேண்டும்.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கையில்லா பிரேரணையினை கொண்டு வர ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனுமதிக்கமாட்டார் என்ற நம்பிக்கை எமக்குள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## "வெஸ்மினிஸ்டர்" குறித்தே பிரச்சினை

19ஆம் திருத்தச் சட்டத்திற்கோ, நல்லாட்சிக்கோ தாங்கள் எதிராளிகள் இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொது செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை மாற்றி, வெஸ்மினிஸ்ட்டர் முறைமையை தோற்றுவிப்பது குறித்தே பிரச்சினை இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதனை அடுத்து கருத்து வெளியிட்ட அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல, எதிர்க்கட்சிக்கு 10 நாட்கள் கால அவகாசம் வழங்குவதாகவும், அதற்குள் 19ஆம் திருத்தச் சட்டம் குறித்து ஆய்வு செய்து தீர்மானம் மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

18ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படும் போது ஒரு நாள் மாத்திரமே வழங்கப்பட்டதாகவும், எனினும் தாங்கள் நல்லாட்சிக்கு முக்கியத்துவம் வழங்கும் கட்சி என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வந்துள்ளதாக, பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார். (இ-5)

## மேதினக்கூட்டத்தில் பங்குகொள்ளுமாறு மகிந்தவிற்கு உத்தியோகபூர்வ அழைப்பு

மேதினக் கூட்டத்தில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபஜபக்ஷவிற்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாரஹேன்பிட்டி அபயராமயவில் வைத்து முன்னாள் ஜனாதிபதிக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பாவினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தென்மாகாண பிரதேச சபை உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

இந்த சந்திப்பிற்கு இடைநடுவில்



அனுர பிரியதர்சன யாப்பா, அபயராமயவிற்கு சென்று அழைப்பினை விடுத்துள்ளார்.

அனுர பிரியதர்சன அபயராமவிற்கு சென்ற போது குழுமியிருந்த பிரதேச சபை உறுப்பினர்கள் இன்னும் வருகிறார்கள், இன்னும் வருகிறார்கள் என கோசமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

எனினும், தாம் வந்த விடயத்தை அனுர பிரியதர்சன யாப்பா, மகிந்தவிற்கு அறிவித்துள்ளார்.

அதன் போது கூட்டம் முடிவடையும் வரையில் காத்திருக்குமாறு மகிந்த, அனுரவிற்கு தெரிவித்துள்ளார்,

முன்னாள் ஜனாதிபதியை பிரதமர் வேட்பாளராக நியமிக்காவிட்டால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தை பகிஷ்கரிக்கப போவதாக தென் மாகாண பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இனவாதத்தை தூண்ட சூழ்ச்சி

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது சிங்களவர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் நடைபெறும் வைபவங்களில் தேசிய கீதத்தை தமிழில் பாடி அந்த பிரதேசங்களில் இனவாதத்தை தூண்டும் கீழ்த்தரமான சூழ்ச்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வரும் நோக்கில் இன வாத ரீதியான செயற்பாடுகளில் ஈடு பட்டுள்ள சில குழுக்கள் இந்த சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

தேசிய கீதத்தை தமிழில் பாடுவதற்கு எதிராக தற்போது நாடு முழுவதும் இனவாத குழுக்கள் சதித்திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறு தமிழில் தேசிய கீதம் பாடப்படும் இடங்களில் கூடியிருக்கும் நபர்களை கொண்டு கலவரத்தை ஏற்படுத்தி புத்தாண்டு கொண்டாட்டங்களை சீர்குலைப்பதே இந்த குழுக்களின் நோக்கம் என கூறப்படுகிறது.

தமிழில் தேசிய கீதம் பாடுவதை இனவாத வஞ்சகர்களே எதிர்க்கின்றனர் என்ற தலைப்பில் சுயாதீன தொலைக்காட்சியில் அண்மையில் நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பப்பட்டது.

அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தமிழில் தேசிய கீதத்தை பாடுவதை எதிர்த்து நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பான காட்சிகள் காட்டப்பட்டன.

தனது இந்த உரையை ஒளிபரப்பியதன் மூலம் தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளதாக கூறி, சரத் வீரசேகர, இழப்பீடு கோரி சுயாதீன தொலைக்காட்சிக்கு கோரிக்கை பத்திரம் ஒன்றை அனுப்பியுள்ளதாக தொலைக்காட் சி யின் உட்தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுடன் வழக்காடவும் தாம் தயார் என சுயாதீன தொலைக்காட்சியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-5)


## பிரிவுத்துயர் பகிர்வு



**அகர்ஷன் குணசிலன்**

லண்டனைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அகர்ஷன் குணசீலன் கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பி.ப.3 மணி தொடக்கம் பி.ப.4.45மணிவரை Hendon Cremtorium, Holders Hill RD, MIll Hill,London NW7 1NB,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**யேசானந்தன் ரகுவேந்திரன்**

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட யேசானந்தன் ரகுவேந்திரன் கடந்த 8ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பி.ப 3மணியளவில் Vai Rimembranze,20091 Bresso Milano, Italy என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**திருமதி லூர்த்தம்மா யேக்கப்**

குருநகரைப்பிறப்பிடமாகவும் ஐக்கிய அமெரிக்கா காம்பியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட யேக்கப் லூர்த்தம்மா கடந்த 6ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று சனிக்கிழமை பி.ப.3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் OLD Joshua சேமக்காலையில் திருவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற வளாகத்திற்குள் புகுந்து தீவிரவாதிகள் சரமாரித் தாக்குதல்!

## 10 பேர் படுகொலை

**(காபூல்)**

**ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் நீதிமன்ற வளாகத்தில் புகுந்து கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதில் பொதுமக்கள் உட்பட 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**



ஆப்கானிஸ்தானில் மசார்-இ-ஷரீப் பகுதியில் நீதிமன்றம் ஒன்று இயங்கி வருகிறது. காலையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த நிலையில் இராணுவ உடையணிந்த தீவிரவாதிகள் திடீரென நீதிமன்ற வளாகத்தில் நுழைந்தனர்.

பொதுமக்கள் சற்றும் எதிர்பார்க்காத நிலையில் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர். அத்துடன் நாட்டு வெடிகுண்டுகளையும் வீசி தாக்குதல் நடத்தினர்.

தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து தீவிரவாதிகளுடன் கடும் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டனர். இந்த சண்டை சுமார் 6 மணி நேரம் நீடித்தது. இதில் 5 பொதுமக்கள் மற்றும் 5 பொலிஸார் உயிரிழந்தனர். 60 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாத குழு பொறுப்பேற்றுள்ளது.

அமெரிக்கா நேட்டோ படை ஆப்கானிஸ்தானை விட்டு முழுவதும் வெளியேறியது. ஆப்கானிஸ்தானில் நடைபெறும் முதல் நீண்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நீதிமன்றத்தில் துப்பாக்கிச்சூடு நீதிபதி உட்பட இருவர் மரணம்




இத்தாலிய நகரமான மிலானில் உள்ள நீதி அரண்மனை என்று அழைக்கப்படும் நீதிமன்றத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நீதிபதி ஒருவரும், சட்டத்தரணி ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டினை, மோசடி மற்றும் திவால் வழக்கு ஒன்றின் பிரதிவாதியே நடத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர், அந்த நீதிமன்ற வளாகத்தில் தஞ்சம் புகுந்து இருந்ததாகவும், பின்னர் அங்கிருந்த இருசக்கர வாகனத்தில் தப்பியோடியதாகவும் இத்தாலிய உள்துறை அமைச்சர் ஏஞ்சலீனோ அல்ஃபானோ தெரிவித்தார்.

பின்னர் மிலானின் வடக்கு பகுதியில் அந்த துப்பாக்கிதாரி பிடிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

நீதிமன்ற வளாகத்தில் துப்பாக்கிச் சூடு நடைபெற்ற சூழலில் அங்கிருந்து சட்டத்தரணிகளும் நீதிமன்ற ஊழியர்களும் வெளியேற்றப்பட்ட பிறகு, அவர்கள் கூட்டம் கூட்டமாக தெருக்களில் இறங்கி ஓடினர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

துப்பாக்கிதாரியை தேடும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்ட போது, மூன்றாவதாக இறந்து போன ஒருவருடைய சடலம் கிடைக்கப் பெற்றதாகவும், ஆனால் அவர் எப்படி இறந்தார் எனத் தெளிவாகத் தெரியவில்லை எனவும் இத்தாலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

## ஓ.பன்னீர்செல்வத்துக்கு சந்திரபாபு நாயுடு கடிதம்



(சென்னை)

ஆந்திர வனப்பகுதியில் தமிழர்கள் உட்பட 20 தொழிலாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து தமிழக முதல்வர் ஓ. பன்னீர் செல்வத்துக்கு, ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பதில் கடிதம் எழுதியுள்ளார்.

சந்திரபாபு நாயுடுவின் கடிதத்தில், வனப்பகுதியில் நடந்த இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விரைந்து விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சம்பவம், ஆந்திர பொலிஸார் நடத்தியது படுகொலை போலி என்கவுண்டர் என்பது தெரிய வந்தால், அது குறித்து நீதி விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (இ-5)

## உள்நாட்டுப் போர் தீவிரம் சவுதி விமானங்களுக்கு ஆகாயத்தில் எரிபொருள் நிரப்புகிறது அமெரிக்கா

ஏமன் உள்நாட்டு போரில் ஈடுபட்டு வரும் சவுதி தலைமையிலான நாடுகளின் விமானங்களுக்கு ஆகாயத்தில் எரிபொருள் நிரப்பும் பணியை அமெரிக்கா ஆரம்பித்துள்ளது .

ஏமனில் நடைபெறும் உள்நாட்டு போர் கடந்த மார்ச் 19 ஆம் திகதி முதல் தீவிரம் அடைந்து ள்ளது. அரசுக்கு எதிராக போரிடும் ஹவுத்தி கிளர்ச்சி படையை ஒடுக்க சவுதி அரேபியாவும் அதன் நட்பு நாடுகளும் குண்டு வீச்சு நடத்தி வருகின்றன. இதில் கிளர்ச்சி படைகள் மீது தொடர்ச்சியாக குண்டு வீசித் தாக்குதல் நடத்திவரும் விமானங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வானிலேயே எரிபொருள் நிரப்பப்படுகிறது.

அமெரிக்காவின் கே-135 ஸ்டார்டோ டேங்கர் என்ற விமானம் சவுதியின் எப்-15 மற்றும் எப்-16 என்ற ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விமானத்திற்கும் வானிலேயே எரிபொருள் நிரப்பியதாக சவுதியின் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இந்த போரில் அமெரிக்காவின் பங்கு அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது. மேலும் 12 பேரை கொண்ட அமெரிக்க இராணுவக் குழு ஒன்று, 2 தளபதிகள் தலைமையில், சவுதி அரேபியாவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் ஆலோசனை வழங்குவதற்காக றியாத்தில் செயற்பட்டு வருகிறது. ஏற்கனவே தொழில்நுட்ப மற்றும் புலனாய்வு உதவிகளை செய்யும்படி [illegible] என்பது [illegible]. (இ-5)




## தடைகள் விலக்கப்படும் வரை அணு ஒப்பந்தம் கிடையாதாம்

### ஈரான் அறிவிப்பு

அண்மையில் ஈரானுக்கும் P5+1 நாடுகளுக்கும் இடையே சுவிட்சர்லாந்தில் எட்டப்பட்ட அணு ஒப்பந்தத்தில், தான் கைச்சாத்திட்டு அதனை இறுதி செய்ய வேண்டும் எனில் அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் முதல் நாளில் இருந்து தம்மீது சுமத்தப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும் என ஈரான் சார்பாக ஜனாதிபதி ஹஸ்ஸன் ரௌஹானி நேற்று முன்தினம் வியாழக்கிழமை காட்டமாக அறிவித்துள்ளார்.

மறுபுறம் ஈரானின் ஆன்மீகத் தலைவரான அயதொல்லா அலி கமேனெய் உள்ளூர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியிலும் மேற்கண்டவாறு அணு ஒப்பந்தம் கைச்சாத்திட இறுதி நிமிடம் வரை ஈரானின் பொருளாதாரத் தடைகளை மேற்குலகங்கள் விலக்குவது தொடர்பில் சந்தேகம் தெரிவித்துள்ளார்.

6 உலக சக்திகளும் ஈரானும் கடந்த வாரம் ஈரானின் யுரேனியச் செறிவூட்டலை இன்னமும் 13 வருடங்களுக்குள் வெகுவாகக் குறைத்து அது அணுவாயுதம் தயாரிக்க முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தும் அதேநேரம் அதன் மீது சுமத்தப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்வது என்ற ஒப்பந்தத்தை எட்டியிருந்தன.

ஆனால் இந்த ஒப்பந்தம் இன்னமும் இறுதி செய்யப்படாத நிலையில் இதற்கு முன்னோட்டமாக செய்யப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் அனைத்தும் கூட இன்னமும் முற்றுப் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் ஈரானுக்கும், அமெரிக்கா, சீனா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் மற்றும் ரஷ்யா ஆகியவற்றுக்கும் இடையே ஒப்பந்தத்தை ஏற்படுத்திய அந்நாடுகளின் பிரதிநிதிகளுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை குறித்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்குக் கால அவகாசம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பங்களாதேஷ் பாடசாலைகளில் நீச்சல் பயிற்சி கட்டாயமாகும்

அரச பாடசாலை மாணவர்கள் கட்டாயம் நீச்சல் கற்கவேண்டும் என்ற விதியை பங்களாதேஷ் அரசு கொண்டுவந்துள்ளது. நாட்டில் ஓடும் நதிகளில் பல குழந்தைகள் விழுந்து இறக்கும் நிலையில், இந்த மரணங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த முயற்சி எடுக்கப்படுகிறது.

ஆண்டுக்கு 18ஆயிரம் பேர் பங்களாதேஷில் நீரில் மூழ்கி இறப்பதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்கான நீச்சல் பயிற்சி அளிப்பதற்கு வசதியாக ஊரகப் பகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்கள் போன்றவை சுத்தப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. நகரங்களில் உள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்களில் உள்ள நீச்சல் குளங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் மிகக் குறைந்த அளவு நீச்சல் குளங்களே உள்ளதால் இந்த முடிவை அமுல்படுத்துவது கடினம் என ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது. - ஸ்பெயின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மகிந்தவை தோற்கடித்தது குற்றமாக உணரப்படுகிறதா?

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் மாற்றம் கொண்டு வருவேன் என்பதே மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் விஞ்ஞாபனமாக இருந்தது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டின் ஜனநாயகத்திற்குப் பாதகம் என்று உணரப்பட்டதன் காரணமாக மைத்திரியின் தேர்தல் பிரசாரம் பொது மக்கள் மத்தியில் எடுபட்டது எனலாம்.

எனினும் இப்போது பாராளுமன்றத்தில் ஏற்பட்டுள்ள ஒரு குழப்பமான சூழ்நிலையில், ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களை நீக்குவது எந்தளவிற்கு புத்திசாலித்தனமானதென்ற கேள்வி எழுந்துள்ளது.

பொதுவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மென்மையான போக்குடையவராக இருப்பதன் காரணமாக, ஜனாதிபதிக்கு இருக்கக் கூடிய பலமான அதிகாரங்கள் பிரயோசனப்படாமல் உள்ளன. இதைப் பாரதியின் மொழியில் **கோரிக்கை அற்றுக் கிடக்கிறது வேரில் பழுத்த பலா** என்று கூறலாம்.

ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் பிரயோசனப் படுத்தப்படாமல் இருந்தாலும் அந்த அதிகாரபலம் மைத்திரியிடம் உள்ளது என்ற பயம் அவரை எதிர்ப்பவர்களிடம் இருக்கவே செய்கின்றது.

எனினும் அந்த அதிகாரங்களையும் நீக்கிவிட்டால் மைத்திரியின் கதை கந்தலாகிவிடும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

ஏனெனில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதான ஒரு அனுதாப அலை தென்பகுதியில் பரவலாக ஏற்பட்டு வருகிறது.

2015 ஜனவரி 8ந் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷ எதிர்பாராத தோல்வியைச் சந்தித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்த மகிந்த ராஜபக்ஷ அலரிமாளிகையை விட்டு வெளியேறுவதற்கு முன்னதாக, அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தினார். அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர்கள் பலர் ஓ! என்று அழுதனர். தங்கள் தலைவருக்கு ஏற்பட்ட தோல்வியை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. தனக்கு எக்காலத்திலும் தோல்வி ஏற்படாது என்ற நினைப்பிலேயே மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாக வரும் முயற்சியில் இறங்கினார்.

எனினும் அந்த முயற்சி அவருக்குத் தோல்வியாகிப்போக, அது இப்போது தென்பகுதியில் மகிந்த மீதான அனுதாப அலையாக உருமாறி வருகிறது.

தேர்தலில் தோல்வியுற்ற மகிந்த மிகவும் புத்திசாலித்தனமாக தனது பிறந்த ஊராகிய அம்பாந்தோட்டைக்குச் சென்றார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் மொழியில் இதைக் கூறுவதாயின் **வெறுங்கையோடு அம்பாந்தோட்டை புக்கான்** என்று கூறமுடியும்.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த தங்கள் தலைவன் பதவியிழந்து; தோல்வி எனும் பெரும் அவமானத்தைச் சுமந்து பிறந்த ஊருக்கு வருகிறார் என்ற செய்தியை அம்பாந்தோட்டை மக்களால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை.

தலையில் அடித்து தகுமோ!... தகுமோ!... என்று அழுது புரண்டனர்.

மகிந்தவின் தோல்விக்கு அவரோடு கூட இருந்த மைத்திரி காரணமாயிற்றாரே! என்பதும் அவர்களுக்குத் தீராத ஆத்திரத்தை கொடுத்தன.

தன் மீது சிங்கள மக்கள் கொண்டுள்ள ஆதரவை-அனுதாபத்தை தனக்குச் சாதகமாக்க நினைத்த மகிந்த, **தமிழர்கள் என்னைத் தோற்கடித்து விட்டனர்** என்று கூற, அது முழுச் சிங்கள மக்களிடமும் மகிந்த மீது அனுதாபத்தை ஏற்படுத்திற்று.

நிலைமை இதுவாக இருக்கும்போது ஜனாதிபதி மைத்திரி தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தையும் உடனடியாக நீக்கினால், எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

# போரினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உதவ கம்பனிகள், வெளிநாட்டவர்கள் முன்வரவேண்டும்

## வடக்கு முதலமைச்சர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு பல்தேசிய கம்பனிகளும் வெளிநாட்டவர்களும் முன்வரல் வேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமாகிய சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற வகையில் வடக்கு மாகாணத்திற்கு ஏனைய மாகாணங்களை விட விசேட தேவையிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்.திருமறைக்கலாமன்றம் அருகாமையில் உள்ள ஜூப்ளி ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் புனரமைப்புச்செய்யப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்வு நேற்றுக்காலை பத்து மணியளவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்.

வடக்கில் மகப்பேறு சம்பந்தமாக திருப்திகரமான நிலை காணப்படுவதாக கூறப்படுகின்றது. இவ் ஆரம்ப சுகாதார நிலையம் 1949 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதியன்று அடிக்கல் நாட்டப்பட்டு அப்போதைய யாழ்.மாநகர முதல்வர் சாம்லூயி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இக்குழந்தை சிகிச்சை நிலையத்தினால் யாழ்.நகர மக்கள் மற்றும் குருநகர் மக்கள் பெரிதும் நன்மைகளை பெற்று வருகின்றனர். யுத்த காலத்தின் போது சேதமடைந்த இவ் சிகிச்சை நிலையத்தினை ஐ.ஓ.சி பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினர் தமது நிதியுதவியில் புனரமைப்புச் செய்துள்ளனர்.

குறித்த நிறுவனம் யாழ்.மக்களின் நன்மை கருதி மேற்கொண்ட மூன்றாவது திட்டமாகும். இதேபோல் சமய நிறுவனங்கள், பல்தேசிய கம்பனிகள், வெளிநாட்டவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களிற்கான அனைத்து விதமான உதவிகள் மற்றும் செயற்திட்டங்களை மேற்கொள்ள வேண் டும் என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த மகிந்த தலைமையிலான அரசாங்கம் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்திற்கு விசேட தேவைகள் காணப்பட்ட போதிலும் அவற்றை கருத்திலெடுக்காது ஏனைய மாகாணங்களை போல் வடக்கு மாகாணத்திற்கும் உதவித்திட்டங்களினை பகிர்ந்தளித்ததனையும் முதலமைச்சர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார். (செ-4)

# தகாத வார்த்தைகளால் வைத்தவர்கள் ஜோன்ஸ்டன் ஆதரவாளர்களே-சந்திரிகா

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை களங்கப்படுத்தும் பொருட்டு, அவரை தகாத வார்த்தைகளில் திட்டி, ஹூ என வைத்தவர்கள் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் ஆதரவாளர்களே என முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரி வித்துள்ளார்.

குருநாகல் நகர முதல்வர் கெமுனு, துணை முதல்வர் அன்வர் சத்தார் மற்றும் நாரம்மலையைச் சேர்ந்த அருண தஹநாயக்கா ஆகியோரே இவ்வாறு மட்டமாக நடந்து கொண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட்ட இவர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சுதந்திரக் கட்சியோடு இணைந்து கொண்டவர்கள் என்றும் சந்திரிகா தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ தனது இணையத்தளம் ஊடாக இவ் விவகாரத்தை பெரிதுபடுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில், குருநாகல் மலியதேவ மகளிர் வித்தியாலய அரங்கில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தொகுதி அமைப்பாளர்கள் கூட்டத்திலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கானை Butterfly International School பண்டத்தரிப்பு Blooming Buds Day Care Centre ஆகிய ஆங்கில மொழிமூலப் பாலர் பாடசாலைகளின் 2015ஆம் ஆண்டிற்கான வருடாந்த விளையாட்டுவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரத்தினம் செல்வக்குமாரியும் சிறப்பு விருந்தினர்களாக யா/சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி அதிபர் திருமதி ச.சிவகுமார், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் ஆர்.புஸ்பரட்ணம், கௌரவ விருந்தினர்களாக பி.ஜெயபாலன் எஸ்.ரவீந்திரன், திருமதி வி.அல்போன்ஸ், திருமதி எஸ்.பிரபாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-3)

## சாந்தி சமாதானம் வேண்டி விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் சாந்தி சமாதானம் வேண்டி விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.கந்தர்மடத்திலுள்ள இந்து சமயப்பேரவை ஸ்ரீநடராஜப்பெருமான் திருக்கோவிலில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் பன்னிரு திருமுறை முற்றோதல் ஞானவேள்வி ஆரம்பமாகும். (இ-3)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



**தெளிவு**

நீ இயலாத நிலைக்குச் சென்று என் அருளை நாடும் பொழுது நான் உனக்கு அங்கேயே அப்பொழுதே உதவிபுரிவேன் என்பது பகவான் வாக்கு.

பொதுவாக மனிதன் இயலாத நிலைக்குச் செல்லாமல் போராட்டநிலைக்குச் செல்கிறான். வெளி வாழ்க்கையில் முயற்சி செய்து உள்வாழ்க்கையில் அருளை நாடுவதே இயலாத நிலை. வெளிவாழ்க்கையில் முயற்சி செய்து கொண்டு உள் வாழ்க்கையில் தடுமாற்றத்துடன் இருப்பதே போராட்ட நிலை.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



மனத்தில் கோபம் பேரலையாகப் பொங்கி எழும்போது நாம் அதை எப்படி அடக்குவது? எதிரான ஓர் அலையை எழுப்புவதன்மூலம்தான் அன்பை நினையுங்கள்.

எப்போதுமே நினைவில் வைத்துக்கொள். முற்றிலும் ஒழுக்க வழியில் நில், தைரியமாக இரு. இதயம் பரிபூரணத் தூய்மையுடன் திகழட்டும். முழுமையாக நீதிவழியில் செல். உயிரே போனாலும் தைரியத்தைக் கைவிடாதே. மதக்கொள்கைகளைப் பற்றியெல்லாம் மூளையைக் குழப்பிக் கொள்ளாதே.

நாம் துயருறுவதற்கு நாம், நாமேதான் காரணம், வேறு யாரும் அல்ல; நாமே விளைவுகள், நாமே காரணங்கள்.

எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள்.உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால் பலவீனர்கள் ஆவீர்கள்.வலிமையானவர்களாக நினைத்தால் வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள். தூய்மையற்றவர்களாக எண்ணினால் தூய்மையற்றவர் ஆவீர்கள். தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர் ஆவீர்கள்.

மனத்தூய்மை பிறருக்கு நன்மை செய்வது– இதுவே எல்லா வழிபாடுகளின் சாரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியின் முன்னாள் தலைவர் ரிச்சி பெனாட் காலமானார்



முன்னாள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரரும் புகழ்பெற்ற கிரிக்கெட் வர்ணனையாளருமான ரிச்சி பெனாட் காலமானார்.

84 வயதாகும் பெனாட் கடந்த சில மாதங்களாக் உடல் நலக்குறைவுற்று இருந்தார்.

கடந்த நவம்பர் மாதம் முதல் தோல் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வந்த பெனாட், சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

அவுஸ்திரேலிய அணிக்காக 28 டெஸ்ட் போட்டிக்கு தலைமையேற்றுள்ளார் பெனாட். இவரது தலைமையில் அவுஸ்திரேலிய அணி எந்த ஒரு டெஸ்ட் தொடரையும் இழந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், 1950-70களில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவானாக திகழ்ந்த பெனாட், டெஸ்ட் போட்டியில் 2000 ஓட்டங்கள் மற்றும் 200 விக்கெட்டுகளை கடந்த முதல் சுழற்பந்து வீச்சாளர் என்ற பெருமையை பெற்றவர். அவரது துடுப்பாட்டம், லெக்ஸ்பின் பவுலிங்யெல்லாம் மிகவும் நேர்த்தியானது.

அவர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றதும் இங்கிலாந்தில் உள்ள பி.பி.சி. தொலைக்காட்சியில் வர்ணனையாளரானார். அதன் பின் அவரது சொந்த நாடான அவுஸ்திரேலியாவில் வர்ணனையாளரானார். அவரது 'நோ நான் சென்ஸ்' வர்ணனைக்கு பல ரசிகர்கள் இன்றும் உள்ளனர்.

அவர் வர்ணனை செய்யும் பாணியில் மயங்கிய பல கிரிக்கெட் ரசிகர்கள், தாங்கள் கிரிக்கெட் ஆடும் நாட்களில் ஆட்டத்தை அவர் வர்ணனை செய்யும் பாணியிலேயே கமெண்ட் அடித்து விளையாடிய காலமும் உண்டு.

பெனாட் மறைவுக்கு அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபாட் இரங்கல் தெரிவித்து அவரது உடல் முழு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என்று கூறியுள்ளார். (க)

## சார்லஸ்டன் டென்னிஸ்

# சானியா-ஹிங்கிஸ் ஜோடி காலிறுதிக்கு தகுதி



மியாமி ஓபன் டென்னிஸில் பிரம்மாண்ட வெற்றிக்கு பிறகு தொடர்ந்து 2 ஆவது வெற்றியாக சார்லஸ்டன் டென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா மற்றும் சுவிட்சர்லாந்து வீராங்கனை மார்டினா ஹிங்கிஸ் ஜோடி காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

ஓபனிங் செட்டில் ஹிங்கிஸ் சற்று மெதுவாகவே விளையாடியிருந்தாலும், சானியா விறுவிறுப்பாக முன்னேறியிருக்கிறார். இந்த வெற்றியின் மூலம் சானியா-ஹிங்கிஸ் இருவரும் சிங்கப்பூர் இரட்டையர் லீடர் போர்டில் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளனர்.

சம்பியன் ஷிப்புக்காக மொத்தம் 8 அணிகள் போட்டியிட்டன. அதில் சானியா மற்றும் கேரா பிளாக் ஆகியோர் கடந்த சீசனில் வெற்றி பெற்றிருந்தனர். தொடர் வெற்றிகளை குவித்து வருவதால் டென்னிஸ் வட்டாரத்தில் சானியா-ஹிங்கிஸ் ஜோடி இப்போது அதிகமாக பேசப்பட்டு வருகிறது. ஹிங்கிஸ் இதுவரை 11 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றிருக்கிறார். ( மகளிர் பிரிவில் 9 - இரட்டையர் கலப்பு பிரிவில் 2) அதேபோல், சானியா மிர்சா 3 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். (அனைத்துமே இரட்டையர் கலப்பு பிரிவல்). (க)

# நெக்ரா பந்து வீச்சு அபாரம் கப்டன் டோனி பாராட்டு

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் இரவு சென்னையில் நடந்த போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ்-டெல்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின. முதலில் விளையாடி சென்னை 150 ஓட்டங்களை எடுத்தது. இலக்கை நோக்கி விளையாடிய டெல்லி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 149 ஓட்டங்கள் எடுத்தது.

ஆனால் சென்னை ஒரு ஓட்டங்களில் திரில் வெற்றி பெற்றது. அல்பி மார்கல் 73 ஓட்டங்கள் எடுத்தார். ஆசிஷ் நெக்ரா 3 விக்கெட் வீழ்த்தினார்.

19 ஆவது ஓவரை ஆசிஷ் நெக்ரா சிறப்பாக வீசினார். அதில் 8 ஓட்டங்களே விட்டு கொடுத்தார். கடைசி ஓவரில் டெல்லி அணி வெற்றிக்கு 19 ஓட்டங்கள் தேவைப்பட்டது. பிராவோ வீசிய அந்த ஓவரில் 17 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது.

கடைசி பந்தில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட போது அல்பி மோர்கலால் பவுண்டரி மட்டுமே அடிக்கப்பட்டது. மேலும் 5 ஆவது பந்தை ரெய்னா அபாரமாக தடுத்து 2 ஓட்டங்கள் மிச்சப்படுத்தி கொடுத்தார்.

இதனால் சென்னை அணி வெற்றி பெற முடிந்தது.

வெற்றி குறித்து சென்னை அணி கப்டன் டோனி கூறியதாவது,

கடைசி ஓவரை வீசிய பிராவோ திருப்பதி அடைந்திருக்க மாட்டார். இருந்தாலும் வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது.

ஆசிஷ் நெக்ரா பந்து வீச்சு அபாரமாக இருந்தது. காயத்தில் இருந்து மீண்டு வந்து சிறப்பாக செயற்பட்டார். இது வேகப்பந்து வீச்சாளருக்கு முக்கியமானது. நீண்ட நாட்களுக்கு பிறகு சென்னையில் விளையாடி இருக்கிறோம்.

இந்த வெற்றி எங்களுக்கு மட்டுமல்ல ரசிகர்களுக்கும் முக்கியமானதாகும். சென்னை ரசிகர்கள் முன்பு வெற்றி பெற்றது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்கள் எதிரணியினரையும் கூட பாராட்டினர் என்றார்.

டில்லி கப்டன் டுமினி கூறுகையில்,

எங்கள் அணி வீரர்கள் நினைத்து பெருமைப்படுகிறேன். கடும் போராட்ட குணத்தை வெளிப்படுத்தினோம். இந்த ஆட்டத்தில் நிறைய கற்று கொண்டோம் என்றார். (க)



# ஹாஸ்லேவுட் விலகல்



மும்பை இந்தியன்ஸ் அணியில் அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஹாஸ்லேவுட் இடம் பெற்று இருந்தார்.

அவுஸ்திரேலிய அணி அடுத்து மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் மற்றும் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடரில் விளையாட இருக்கிறது.

இந்த இரண்டு தொடருக்கான அவுஸ்திரேலிய அணியில் ஹாஸ்லேவுட் விளையாட இருப்பதால், அவரது பணிச் சுமையை கருத்தில் கொண்டு ஐ.பி.எல். போட்டி தொடரில் அவர் விளையாடமாட்டார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. (க)

# கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ். மாவட்டட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் 2015 ஆம் ஆண்டில் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து பற்றீசியன் அணி ஆடியது

இப் போட்டியில் ஆரம்பம் முதல் ஜொலிஸ்ரார் அணி தனது ஆதிக்கத்தை செலுத்தி 54-48 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது.

இவ் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டதிடலில் மாலை 6.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் ஜொலிஸ்ராரை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# டோனியை சீண்டிய ஹர்பஜன்




இந்தியாவின் தலைசிறந்த அணித் தலைவர் கங்குலி தான் என்று இந்திய சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் தெரிவித்துள்ளார். இந்திய அணியின் மூத்த வீரரான ஹர்பஜன்சிங், இந்திய அணியில் இருந்து ஒதுங்கி இருக்கிறார். தற்போது ஐ.பி.எல். தொடரில் மும்பை அணிக்காக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் டில்லியில் கிரிக்கெட் இன்ஸ்ட்டிடியூட் தொடக்க விழாவில் பங்கேற்ற ஹர்பஜன் சிங், சச்சின், கங்குலி, டிராவிட், கும்ப்ளே, லட்சுமணன் போன்ற மிகப்பெரிய வீரர்களுடன் ஆடும் வாய்ப்பு கிடைத்தது எனது அதிர்ஷ்டமாகும் என்று தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் கூறுகையில், நான் கிரிக்கெட்டில் எதையாவது சாதித்துள்ளேன் என்றால், அதில் இவர்களின் பங்களிப்பு கண்டிப்பாக உள்ளது. இந்தியா கண்ட தலை சிறந்த அணித்தலைவர்களில் ஒருவர் கங்குலியாகும்.

ஷேவாக், கோலி உள்ளிட்ட தலைசிறந்த வீரர்கள் அவர்களுக்கே உரித்தான சிறப்பான டெக்னிக் வைத்துள்ளனர். எனவே, அவர்களின் திறமையை அப்படியே பயன்படுத்திக்கொள்வதுதான் நல்லது என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே, டோனிக்கு எதிராக யுவராஜ்சிங் தந்தை யோக்ராஜ் பேட்டி கொடுத்தார், இதைத் தொடர்ந்து மூத்த வீரர் ஹர்பஜன்சிங் டோனியன் கப்டன்ஷிப் பற்றி பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சப்பை பந்தாடியது ராஜஸ்தான் றோயல்ஸ்



பஞ்சாப்புக்கான எதிரான போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் 26 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நேற்று புனேயில் 3-வது லீக் ஆட்டம் நடந்தது. இதில், ராஜஸ்தான் றோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் விளையாடின. நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்ய, ராஜஸ்தான் அணி முதலில் களமிறங்கியது.

ஆரம்ப வீரர் ரகானே 8 பந்துகளை எதிர்கொண்டும் ஓட்டம் ஏதும் எடுக்காமல் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். மற்றொரு ஆரம்ப வீரரான சாம்சன் 5 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். அவர் சந்தீப் சர்மாவின் பந்தில் எல்பிடபுள்யூ ஆகி அரங்கு திரும்பினார். அணித் தலைவர் ஸ்மித், கவனத்துடன் முன்னேறிய வேளையில், அவருடன் மறு முனையில் ஆடிக் கொண்டிருந்த கருண் நாயர் 8 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து விக்கெட்டை பறிகொடுத்தார். பவர் பிளேயில் இந்த 3 விக்கெட்டுக்களும் விழுந்தன.

இதனால், ஸ்மித் - ஸ்ரூவேர்ட் பின்னி நிதானமாக, அதேசமயம் அடிக்க வேண்டிய பந்தை மட்டும் அடித்து ஆடினர். ஆனால் இந்த ஜோடியையும் பஞ்சாப் பந்து வீச்சாளர்கள் நிலைகுலையச் செய்தனர். அரை சதம் எடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஸ்மித் 33 ஓட்டங்களிலும், பின்னி 13 ஓட்டங்களிலும் ஒரே ஓவரில் அவுட் ஆக, ராஜஸ்தான் அணி ஆட்டம் கண்டது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் அதிரடியாக ஹூடா 15 பந்துகளில் 3 சிக்சர், ஒரு பவுண்டரியுடன் 30 ஓட்டங்கள் குவித்து அனுரீத் சிங் பந்தில் போல்டாகி வெளியேறினார்.

அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 126 ஆக இருந்தது. மறுமுனையில், அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய போல்க்னர் 46 ஓட்டங்கள் குவித்து ஆட்ட மிழக்க, ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 162 ஓட்டங்கள் என்ற கௌரவமான எண்ணிக்கையை எட்டியது.

இதையடுத்து 163 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 136 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

இதனால் 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக ராஜஸ்தான் அணியின் போல்க்னர் தெரிவானார். (க)

## இன்றைய போட்டிகள்

PEPSI IPL

ஹைதராபாத் VS சென்னை
எம்.ஏ.சிதம்பரம் ஸ்ரேடியம், சென்னை.
மாலை 4 மணி

பெங்களூர் VS கொல்கத்தா
ஈடன் கார்டன்ஸ், கொல்கத்தா.
இரவு 8 மணி



# நீண்டகால வேலைத் திட்டங்களில் இலங்கைக்கு ஐ.நா உதவும்

### ஐ.நா உதவிச் செயலர் – ரணில் சந்திப்பு

இலங்கை ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நீண்டகால நடவடிக்கைகளுக்கு மாத்திரமல்ல, 100 நாள் வேலைத்திட்டத்தின் முக்கியமானவற்றுக்கும் ஐ.நா அமைப்பின் உதவி இலங்கைக்கு கிடைக்கும் என அந்த அமைப்பின் உதவிச் செயலாளர் நாயகம் ஹவுலி ஹேங் சூ தெரிவித் துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள ஐ.நா குழுவினர் தமது பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வழங்கப்பட்டு வரும் ஒத்துழைப்புகளுக்கு பிரதமருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்து கொள்வதாகவும் உதவிச் செயலாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார். (செ-11)



# யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ்.இந்துக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டை முன்னிட்டு யாழ்.இந்துவின் youth wing அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "Cricket Fiesta" மாபெரும் கிரிக்கெட் போட்டித் தொடர் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியில் இருந்து வெளியேறிய இறுதி ஐந்து பிரிவினர் பங்குபற்றும் ஆறு பந்து பரிமாற்றங்களைக் கொண்ட இத்துடுப்பாட்ட போட்டி 2006ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்களால் 2012 ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

2012ஆம் ஆண்டு பிரியதர்சன் தலைமையிலான 2009 ஆண்டு பிரிவு மாணவர்களும், 2013ஆம் ஆண்டு பருவகால போட்டியில் 2011ஆம் ஆண்டு மாணவர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

இம்முறை மேலதிகமாக ஆசிரியர் கழக அணி மற்றும் பழைய மாணவர் சங்க அணியும் களமிறங்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## பூட்டான் பிரத...

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கை வந்துள்ள பூட்டான் பிரதமர் ஷெரிங் டொபே நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார். குறித்த நிகழ்வு பழைய பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. அங்கு வந்த பூட்டான் பிரதமரை ஜனாதிபதி வரவேற்றார். அதனை தொடர்ந்து பூட்டான் பிரதமருக்கு முப்படை வீரர்களின் அணி வகுப்புடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்வில் இரு நாட்டு அமைச்சர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து இலங்கை மற்றும் பூட்டானுக்கு இடையிலான இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பூட்டான் பிரதமர் ஷெரிங் டொபே ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை சார்பில், வெளியுறவு அமைச்சின் செயலாளர், சித்ராங்கனி வகீஸ்வர கையெழுத்திட்டார். அதேவேளை, பூட்டான் சார்பில், வெளியுறவு செயலாளருக்கு பதிலாக தூதுவர் சோனம் டி. ரெக்பே கையெழுத்திட்டார். கொழும்பிற்கும் திம்புவிற்கும் இடையே இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சர்கள் மட்டத்தில் வருடாந்த அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கான பொறிமுறையை நிறுவுவது தொடர்பில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் மூலம், இரு நாடுகளின் விருப்பங்களின் அடிப்படையில் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியிலான பிரச்சினைகள் தொடர்பிலான கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. (செ-11)

## எதிர்க்கட்சி...

றனர்.

இந்தநிலையிலேயே சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவர் பதவியை தமது கட்சிக்கு வழங்கவேண்டும் என்று சபாநாயகரிடம் கோரியுள்ளார்.

இந்தக் கடிதத்தில் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் மற்றும் தலைவர் சம்பந்தன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். (செ-11)

## கூட்டமைப்பு–ரணில்...

தொடக்கம் இரவு 7.30 மணிவரை இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, சுன்னாகம் குடிநீர் பிரச்சினை, அரச நியமனங்கள் மற்றும் பொதுமக்களின் காணிகளை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதாக த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலம்புரிக்கு தெரிவித்தார்.

கடந்த சுதந்திர தினத்தன்று ஒரு சில தமிழ் அரசியல் கைதிகளையாவது விடுதலை செய்திருக்கலாம் என்ற கூட்டமைப்பின் குற்றச்சாட்டை பிரதமர் ரணில் ஏற்றுக்கொண்டதோடு, அவர்களின் விடுதலை தொடர்பாக தான் உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது உறுதியளித்துள்ளார்.

இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதற்கு தாம் விரைந்து கவனம் எடுப்பதாகவும் இதன்போது பிரதமர் உறுதியளித்துள்ளார்.

மேலும் மாகாண ஆளுநர் மற்றும் மாவட்ட அரச அதிபர் நியமனங்களின் போது சிவில் மற்றும் தமிழ் அதிகாரிகளை நியமித்தல் உள்ளிட்ட விடயங்களில் கவனஞ் செலுத்த வேண்டுமென்ற கூட்டமைப்பின் கோரிக்கையை பிரதமர் ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் வட மாகாண, மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களாக அந்தந்த மாவட்டங்களின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் கூட்டமைப்பு இதன்போது முன்வைத்துள்ளது.

இச்சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, ரஞ்சித் மத்தும பண்டார, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், பொன்.செல்வராஜா மற்றும் அரியநேத்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ-11)

## நிறைவேற்று...

கடவுளே அப்படி என்றால் அவருக்கு எதனை செய்ய வேண்டுமெனக் கூறி மக்கள் வாக்களித்தார்கள்.

இறுதியாக, நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படாவிட்டால் பாதைக்கு இறங்கவும் ஆயத்தமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இப்போது...

இலங்கையின் சமகால நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் கருத்துத் தெரிவித்த ஜென்கின்ஸ் மேலும் கூறுகையில்,

தென்னாபிரிக்காவில் நிற வெறிக் கொள்கை கொண்ட 10 தலைவர்கள் நீக்கப்பட்டமையை அடுத்தே அங்கு சமாதானம் நிலை பெற்றது. அதேபோன்று இலங்கையிலும் 2015 ஜனவரி 8ஆம் திகதிக்கு பின்னர் இயல்பு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனை தவறவிடக்கூடாது.

தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் குழுவே இலங்கையிலும் அமைக்கப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். அந்த அனுபவங்களை கொண்டு இலங்கையின் பிரச்சினையை தீர்ப்பதற்கான பொறிமுறையே அவசியமானது.

போர் நடக்கலாம். பலர் கொல்லப்படலாம். எனினும் இறுதியில் பேச்சுவார்த்தை ஒன்றின் மூலமே பிரச்சினைக்கு தீர்வை எட்ட முடியும் என்று தென்னாபிரிக்காவின் தேசிய தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்திருந்தார். இலங்கையில் சமூகங்களுக்கு இடையிலான சந்தேகங்கள் நீக்கப்படவேண்டும்.

இதற்காக முக்கிய பாத்திரங்களை கொண்டுள்ள இனவாதக் கட்சிகள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு தயாராக வேண்டும். இதன்போதே சந்தேகத்தை தீர்த்து பிரச்சினைக்கான தீர்வை எட்டமுடியும் என ஜென்கின்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில் கடந்த 8 வருடங்களாக ஈடுபாட்டைக் கொண்டிருக்கிற ஜென்கின்ஸ், அண்மையில் சிங்கப்பூரில் இலங்கை இனப் பிரச்சினை தீர்வு தொடர்பில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றின் போதும் இவரே தென்னாபிரிக்கா சார்பில் பங்கேற்றிருந்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி...

பதி சந்திரிகாவிற்கு ஊ சத்தமிட்டது நாட்டின் குடிமகன் என்ற ரீதியில் என்னை கவலையடையச் வைத்துள்ளது.

முன்னாள் தலைவர் ஒருவருக்கு ஊ சத்தமிடும் நிலை சமூகத்தில் ஏற்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஜனாதிபதி தேர்தலின் போது மக்கள் மைத்திரிபால சிறிசேனவிற்கே அதிகாரத்தை வழங்கினார்கள். சந்திரிகாவிற்கல்ல.

எனினும் முன்னாள் ஜனாதிபதியை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஆலோசகராக நியமித்தவர்களே இவ்வாறான நிலைக்கு பொறுப்புக் கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


### விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18 -55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/=-35000/= வரை. தங்குமிடம், உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள். (049)

தொடர்புகளுக்கு :- 0766398366


# மோட்டார் சைக்கிள்கள் விபத்து; குடும்பஸ்தர் மரணம்; ஒருவர் காயம்

(கரணவாய்)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் வேகமாக மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படடு சிகிச்சை பெற்று வருகின்றார். இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.10 மணியளவில் நெல்லியடி புதிய சந்தை பகுதிக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் ராஜ கிராமத்தினை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான இன்பம் புஸ்பகரன் (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேலும் கரணவாயைச் சேர்ந்த பொன்னம்பலம் பிரதாபன் (வயது 24) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னா மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இவ் விபத்து தொடர்பாக நெல்லியடி பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)


### காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் 2 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. (062)

தொடர்புகளுக்கு :- 0215616110 0779863089


## அரசியலமைப்பு சூழ்ச்சி...

தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய நேற்று கொழும்பில் ஒழுங்கு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில்கலந்து கொண்டுபேசும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாகவே இந்த அரசியலமைப்பு சூழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது.

எனினும் உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கத்திற்கு அதில் இருந்த கெடுதியான திருத்தங்களை நீக்க நேர்ந்துள்ளது என சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தனக்கு எதிரான முறைப்பாடு, அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் அரசியல் பழிவாங்கல் என நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளமை குறித்தும் சம்பிக்க ரணவக்க கருத்து வெளியிட்டுள்ளார்.

எவருடனும் தனக்கு அரசியல் ரீதியான கோபதாபங்கள் இல்லை எனவும் நடந்த முறைகேட்டை நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதே தனது தேவை எனவும் அவர் கூறியுள்ளார். (செ-11)


### SARAVANA Texs
சரவணா புடவையகம்

வாடிக்கையாளர்களுக்கான. அறிவித்தல்

இல :- 770,772, கே.கே.எஸ் வீதி (தட்டாதெருச்சந்தி) எனும் முகவரியில் இயங்கி வந்த சரவணா ரெக்ஸ் 526, 529 பருத்தித்துறை வீதி நல்லூர் எனும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன். (C-634)

-உரிமையாளர்





### KUMARAN SILKS புத்தாண்டின் புரட்சி!

குமரன் சில்க்ஸ்

இல. 788, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 205 4075 (C-628)

Discount 10% to 50% வரை

கடை இடமாற்றம் செய்யப்பட இருப்பதால் மலிவு விலையில் அனைத்து ஆடைகளும் விற்பனை



### Join Sri Lanka's #1 ESOFT
Shaping Lives, Creating Futures.

Vacancies @ ESOFT

*Sri Lanka's Leader in Professional ICT Education is looking for skilled people*

**Management Trainee - Administration**

The position in available for smart, energetic, self motivated and result oriented young candidates age below 28 years residing in or around Jaffna.

Responsibilities will include managing day to day operations in human resources management.Office administration, purchasing, business promotion,quality assurance and any other duties assigned by the higher management.

Must be willing to work long hours and travel out of Jaffna, if required for special duties with regards to our branches.

Ideal candidate would be pleasant and well presented, with excellent communication skills, with a **Con-Do & Winning attribute**, with basic skills in handling a computer for word processing and email communications.

Experience is not required, and you MUST BE a graduate, preferably in management, but other graduates may apply too. Work will consist of a 5 ½ working week, which may include weekends.

Training period will be for 6 months, after which you will be evaluated and if successful, absorbed into a Permanent Management position with an above average salary + benefits.

Salary will be approx 25,000 during the Training Period.
If the way of role is succeeds candidate will became as an Assistant Manager.

**Established in 2000, ESOFT has rapidly grown to be a trendsetter in the industry.**

**As part of our expansion, we are looking for skilled individuals who can work in a team environment, to achieve set goals.**

**Successful candidates should be self motivated and have the capability of setting own standards and be able to see that they are achieved and surpassed.**

*How to Apply*

Send us your completed CV within 10 days of this advertisement including a covering letter introducing yourself. Please state the position applied as the subject line of the email

**ESOFT METRO CAMPUS**
137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel: 021 222 4142, Hotline: 077 309 9 308
Web: http://www.esoft.lk Email: jaffna@esoft.lk (C-628)



### யாழ்.வடமராட்சி பிரதேசத்தில் நவீன தனியார் வைத்திய சேவை வசதிகள்

ரூபின்ஸ் மருத்துவமனை
வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்

யார்ழ்.வடமராட்சி பிரதேசத்தில் நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நவீன வசதிகளுடனான ரூபின்ஸ் தனியார் வைத்தியசாலையில் மக்களுக்கான வைத்திய சேவைகள் ஆரம்பித்து வழங்கப்படுகின்றன.

- 24 மணிநேர இரவு பகல் வெளிநோயாளர் வைத்தியசேவை (OPD)
- 24 மணிநேர இரவு பகல் மருந்தக சேவை (PHARMACY)
- 24 மணிநேர ஆய்வுகூட சேவை (LABORATORY)
  - HAEMATLOGY
  - BIOCHEMISTRY
  - HORMONS
  - URIN

– துறைசார் வைத்திய நிபுணர்களின் சேவைகள்




- பொது வைத்திய நிபுணர்கள்
- எலும்பு முறிவு சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்கள்
- பொது சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்கள்
- கண் வைத்திய நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர்கள்
- உளநல வைத்திய நிபுணர்கள்

(C-635)

● 24 மணிநேரமும் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும், ஈமெயில் மூலமாகவும் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்று பதிவுகளை மேற்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கங்கள் :-
021 226 1500 / 021 492 7232

ஈமெயில் :- admin@ruhbins.com

[illegible] பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

Ruhbins Hospital


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.